MEGHASANDESA

TRANSLATED INTO TAMIL FROM

The Famous Sanskrit Work Meghasandesa of
Celebrated
Sri Mahakavi Kalidasa

(With full notes & Geographical information)

PANDIT M. DURAISWAMI AIYANGAR,
AYURVEDA BHUSHANA
Diplomaed Ayurvedic Medical Practitioner ; Lecturer,
The Madras Ayurvedic College ; Physician,
S. K. P. D. Hospital, Madras ; and
Author of the Ayurvedic System of
Pharmacopœia, Kadambari
(in Tamil) etc., etc.

MADRAS
V. KALYANARAM IYER & CO.
1913

Printed by Thompson & Co. at the Minerva Press
33, Broadway, Madras

மேகஸந்தேசம்

இஃது

டிப்ளோமா பெற்ற ஆயுர்வேத டாக்டரும்,
சென்னை ஆயுர்வேதகாலேஜில் போதகாசிரியரும்,
எஸ். கே. பி. டி. ஆஸ்பத்திரியில் டாக்டரும்,
'காதம்பரீ,' 'ஔஷதயோகவிதி' முதலிய
நூல்களியற்றியவருமான

மாடபூசி

பண்டித பே. துரைஸ்வாமி ஐயங்கார்

ஆயுர்வேத பூஷண

அவர்களால் இயற்றப் பெற்றது.

மஹாகவியென்று பெரும்புகழ் பெற்ற ஸ்ரீகாளிதாஸன்
வடமொழியிலியற்றிய மேகஸந்தேசத்தின்
தமிழ் மொழிபெயர்ப்பு.

சென்னை:

வி. கல்யாணராம ஐயர் அண்ட் கோ.

1913

ஸ்ரீ

நூன்முகம்

மேகத்தினிடம் செய்திகளைச் செப்பித் தூதனுப்புதலை முக்கியமாகப் பெற்றதால் இந் நூல் மேகஸந்தேசமென்னும் பெயரைப் பெற்றுள்ளது; மேகதூதமெனவும் மொழியப்படுகின்றது. வடமொழியில் அழகிய பத்தியங்களாலாகிய இந் நூல் உருவத்திற் சிறிதெனினும், வாக்கியங்களின் வனப்பிலும், பொருட்களின் பான்மையிலும், இரஸவிசேஷங்களின் இணைப்பிலும் காளிதாஸமஹாகவியின் காவியங்களுள், இஃது மிகச் சிறப்புற்று அவற்றிற்குச் சிரோமணியெனத் தகும் சீர்மையைப் பெற்றிருக்கின்றது. இதிற் பிரஸித்தி பெற்ற விரிவான கதையொன்றும் விசேஷமாய் அமைந்தில்லையாயினும், மிக மனோஹரமான விப்ரலம்பமென்னும் சிருங்காரரஸத்தையே [1]முக்கியமாகக் கொண்டு, ஆதிமுதல் அந்திமம் வரையில் அபரிமிதமாய் மனக்களிப்பூட்டுமாறு வர்ணிக்கப்படும் சிறிய விஷயமே

1. சிருங்காரரஸமானது விப்ரலம்பமென்றும், ஸம்போகமென்றும் இருவகைப்படும்; தம்பதிகள் பிரிந்திருக்குங்கால் அவர்களது நிலைமைகளைப்பற்றி வர்ணிக்கப்படும் சிருங்காரமானது விப்ரலம்பமென்றும், ஓரிடத்திற்கூடியிருக்கையிலுள்ள நிலைமைகளைக் கூறும் சிருங்காரமானது ஸம்போகமெனவும் மொழியப்படும்.

வித்வான்களின் மனதுக்கு வியப்பூட்டும் தன்மையது; அஃது, வடமொழியில் இந்நூலியற்றிய மஹாகவியினுடைய மதியின் திறமையையும் பெருமையையும் நன்கு விளங்கச் செய்கின்றது.

ஸ்ரீவால்மீகிமாமுனிவர் ஸ்ரீமத்ராமாயணத்தை இயற்றி, முதலில் மஹாகவிகளுக்குக் காவியரசனையில் மார்க்கத்தை யுபதேசித்ததுபோல், கவிகுலதிலகனை காளிதாஸனே இத்தகைய ஸந்தேசகாவியம் வரைவதற்கும் வழிகாட்டிய முதற் புருடனாவான்; ஆதலின் முதலில், இராமாயண முதலியவற்றில் ஆங்காங்கு வர்ணிக்கப்பட்டுச் சிதறுண்டிருக்கும் ஸந்தேசமென்னும் தூதனுப்பும் விஷயமனைத்தையும் ஒருங்கே ஒழுங்காயமைத்து இங்ஙனம் ஓர் பிரபந்தமாய் இயற்றக் கூடிய தான வகையைத் தேடிய புகழுக்குரியவன் இக் கவிராயனெனக் கூறவேண்டும். இதற்குப் பின் பல ஸந்தேசகாவியங்கள் இதற்குப் போலியா யேற்பட்டன வென்றாலும், மேகஸந்தேசத்திற்குள்ள மனோஹரத்தன்மையும், கவிகளுள் எவ்வகையிலும் முதன்மை பெற்ற மஹாபுருடனது முகத்திலிருந்து அனைத்திற்கும் ஆதியில் வெளிவந்ததனாலான அதன் பெருமையும் மற்றவைக்குண்டாவதெங்ஙனம்? உலகத்திற் பெரும்பான்மையோர் அவரவரது மனோபாவங்களுக்கும் நிலைமைகளுக்கும் ஏற்றவண்ணமே மற்றவரது தன்மைகளுமாகுமென்று நினைக்குமியல்பினரென்னும் விஷயத்தை

அனுபவங்களாலறிந்தவனான இக் கவியானவன், பிரிவாற்றாமையினால் பெரிதும் பரிதவிக்கும், இயக்கனது நிலைமைகளுக்கேற்றவண்ணம், மேகமேகவேண்டிய மார்க்கங்கள் முற்றிலுமுள்ள நதிமுதலியவற்றை அவ்வியக்கன் வகைவகையாய் வர்ணிப்பதாக மொழிவதானது, ப்ரியமுள்ள தம்பதிகளது பிரிவாற்றாமையின் பிரபாவத்தைப் பிரதானமாய் விளக்க முயன்ற இந் நூலுக்கு மிகவும் மேன்மையைத் தருகின்றது. இந் நூலுக்குப் பின் வந்த எந்த ஸந்தேசகாவியமும், ஒன்றிரண்டைத் தவிர, இவ்வாறாக இன்றியமையாத பல விஷயங்களில் இதற்கு இணையாகாதென்று, இந்நூலையும் இதற்குப் போலியாக வந்த மற்றவைகளையும் முற்றிலும் உற்று நோக்குபவரே உணரக் கூடும். வடமொழியில் நாடக முதலியவற்றிற்கு இருப்பதுபோல், ஸந்தேசமென்னும் காவியமியற்றுவதற்கு இலக்கண நூலேதும் இருப்பதாய் அறியப்படவில்லையாயினும், இம் மேகஸந்தேசமே முதலில் இலக்கியமாகவும், பிறகு மற்றவர் இயற்ற முயன்ற ஸந்தேசங்களுக்கு ஒருவாறு இலக்கண நூலாகவும் ஏற்பட்டதெனக் கூறவேண்டும். ஆம்; பிறகு ஸந்தேசகாவிய மியற்றியவர், மேகஸந்தேசத்திலிருப்பது போலவே மந்தாக்ராந்தா என்கிற விருத்தத்தையும், விப்ரலம்பசிருங்காரத்தையும், வர்ணனைகளின் வகைகளையும், பத்தியங்களின் எண்ணிக்கைகளையும் பெரும்பாலும் பின்பற்றியிருக்கின்றனர். ஸமீபகாலங்களில் எழுதிய சிலவற்றிற் பத்தியங்களின் எண்ணிக்கைச்

தெரிந்து மிருதியா யிருப்பதை ஆலோசித்தால், மேகஸந்
தேசத்திற் பிற்காலங்களிற் பிறரால் எங்ஙனமோ ஆங்
காங்கு இடையில் இணைக்கப்பட்ட வேறு பத்தியங்
களைக் காளிதாஸனுடையதாகவே கருதி, அவ்வாறு
அவரும் அதிக பத்தியங்களை வரையலாயினர் எனத்
தோற்றுகின்றது. மேகஸந்தேசத்தின் சில பதிப்பு
களில் ஸர்க்கம் முதலிய பிரிவுகளில்லாமலிருப்பினும்,
தெலுங்கு முதலியதிற் பதிப்பித்தச் சிலவற்றில் முதல்
ஸர்க்கம் இரண்டாம் ஸர்க்கம் என்றும், தேவநாகரலிபி
யிலுள்ள வேறு சிலவற்றில் பூர்வமேகம் உத்தரமேகம்
என்றும், பூர்ணஸரஸ்வதியினுடைய வியாக்கியானத்
தின்படி முதல்ஆச்வாஸம் இரண்டாம் ஆச்வாஸம் என
வும் பிரிவுகள் காணப்படுகின்றன.

இக் கவிராயனுக்கு வால்மீகியின் வாக்குகளில்அள
வற்ற ஆதராதிசயமுண்டென்பது அகில வித்வான்களும்
அறிந்த விஷயமாதலாலும், மஹாபுருடரது மேன்மை
பொருந்திய வரலாற்றை மனத்திற் கொண்டேனும்
மற்றோர் கதையை வரைவது விசேஷமென இவன்
கருதியிருக்கக் கூடுமாகையாலும், இராமாயணத்தில்
ஸ்ரீசக்கிரவர்த்தித்திருமகன் ஸீதாபிராட்டியினிடம்
ஆஞ்ஜனேயரைத் தூதனுப்பிய வரலாற்றைக் கருத்தில்
வைத்தவனாய், இவன் இம் மேகஸந்தேசத்தை இயற்றி
யிருக்க வேண்டுமென்பதற்கு ஸ்ரீமான் பண்டித ஆர்.
வி. கிருஷ்ணமாசாரியர் எடுத்துரைக்கும் ஆதாரங்களை

ஆதரவுடன் ஏற்காதவருமுளரோ? அவை எவை யெனில்:—

இந் நூலின் துவக்கத்திலேயே, தனதருமைக் காதலியை விட்டுப் பிரிந்த யக்ஷனை தீராளொருவன் எனக் குறிப்பதால், மனத்தினால் ஆலோசிக்க முடியாத மஹிமை பொருந்திய மஹாபுருடனொருவனை இந் நூலுக்கு நாயகனாக நிச்சயிக்கின்றானெனவே நினைக்க வேண்டும். 'ஜானகி நீராடி மிகவும் புனிதமான நீர்களைப் பெற்ற...' எனவும், 'இராமகிரியின் ஆச்ரமங்களின் கண்...' எனவும், 'ஸ்ரீராமனது திருவடிகளின் சின்னங்களைப் பெற்ற...' என்றும், 'இராவணனது புயங்களால் ஆட்டங்கொண்ட அடிவாரத்தின் சந்திபந்தங்களை யுடையது...' எனவும, 'இங்ஙனமுரைத்ததும் ஸீதையானவள் ஹநுமானைப் பார்த்தது போல்...' எனவும இவ்வாறு பல விடங்களிற் பிரயோகிப்பதை நோக்குங்கால், இக்கவி இராமாயணகதையையே கருத்திற் கொண்டு மேகஸந்தேசத்தை இயற்றினனெனக் கூறுதல் பொருந்தும். அல்லாமலும், இராமாயணத்தில் ஹநுமானுக்கு உபமானமாகக் கூறிய குஞ்ஜரம் குன்றத்தின் சிகரம் முதலியவற்றை இங்கு மேகத்திற்கும் உபமானமா யுரைப்பது, இஷ்டம் வாய்[illegible]ம் உருவமெடுக்கவல்ல வல்லமை ஹநுமானுக்கிருந்தது போல் மேகத்திற்கும் உண்டென வர்ணிப்பது, ஸுக்ரீவன் வானரர்களுக்கு வழிகளை யுபதேசித்ததற்கேற்ப

இங்கு யக்ஷனும் மேகத்திற்கு மார்க்கங்களை மொழிந்திடுவது, ஸுவேலபர்வதத்தின்மீது இலங்கையைப் போல் கைலேமலையினுச்சியில் அளகாபுரி அமைந்திருப்பதாகக் கூறுவது, இலங்கையினுள் மாலைநேரத்தில் ஆஞ்ஜனேயரைப் போல் அம்புதமும் அந்திப்பொழுதில் அளகையினுள் பிரவேசிக்குமாறுரைப்பது, இரவில் ஸீதையினிடம் ஹநுமான் சரீரத்தை மிகச் சிறிதாக்கிக் கொண்டு இராமனது செய்தியைச் செப்புவதற்குச் சென்றது போல் மேகமும் உடலையொடுக்கிக் கொண்டு அவ்விதம் செய்யும் வண்ணம் அதற்கு வகை கூறுவது, அசோகவனத்திற் கேட்பாரின்றி வஸித்த ஸீதையின் வெகு தீனமான நிலைமையைக் குறித்து வால்மீகிமுனிவர் வர்ணிக்கும் விதங்களைப் பல வகையிலும் பின்பற்றி இங்கு யக்ஷனது மனைவியின் நிலைமையை மனமிரங்குமாறு வர்ணிப்பது, இன்னும் இவை போன்ற பல விஷயங்கள் இராமாயணத்திலுள்ள ஹநுமத்ஸந்தேசத்தை மனத்திற் கொண்டே மேகஸந்தேசத்தை இக்கவி இயற்றினனென்பதற்கு வெளிப்படையான ஆதாரங்களாகின்றன.

இதற்குப் பின் இதை அநுஸரித்து ஏற்பட்ட ஸந்தேசகாவியங்களுள், கவிதார்க்கிகஸிம்ஹமென்றும், ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரென்றும் பிரஸித்தி பெற்ற ஸ்ரீமந்நிகமாந்ததேசிகர் அருளிச் செய்த ஹம்ஸஸந்தேசமே மிக முக்கியமானது. பத்தியங்களின் எண்

ணிக்கையிலும், ஆச்வாஸமென்கிற பிரிவுகளின் இணைப்பிலும், வாக்கியங்களின் நடையிலும், கருத்துகளின் கோட்பாடுகளிலும் ஹம்ஸஸந்தேசமே மேகஸந்தேசத்திற்கு மிகவும் ஏற்றதா யிருக்கின்றது. அல்லாமலும், ஹம்ஸஸந்தேசம் சில விஷயத்தில் அல்லது சில விடங்களில் மேன்மையினால் மேகஸந்தேசத்தையே மீறியதெனக் கருத வேண்டி யிருக்கின்றது. அஃதெங்ஙனமெனில், ஹம்ஸஸந்தேசத்தில் ஸ்ரீராமனையும் ஸீதையையும நேராகவே நாயக நாயிகைகளாகவும், எவ்விதத்திலும் பக்ஷிகளுக்குள் பெருமை பெற்றதாகக் கூறப்படும் இராஜஹம்ஸத்தைத் தூதனாகவும் அமைத்து, 'மானிடத்தன்மையை மேலாக மதித்து, ஸர்வோத்தமமான ஸூர்யவம்சத்தில் ஆவிர்ப்பவித்த லக்ஷ்மீபதியான ஸாக்ஷாத் ஸர்வேச்வரன்...'[1] என்று கதாநாயகனுக்குக் குலகோத்திரங்களாலும் தைவங்களுக்கெல்லாம தைவமாயிருக்குந் தன்மையினாலுமுண்டான வளப்பங்களையும் விளக்கி, கம்பீரமாய் அழகிய தோரணியிற் காவியமியற்றிய ஸ்ரீவேதாந்ததேசிகர், தேவர்களிற் கீழான ஜாதியைச் சேர்ந்த ஒரு யக்ஷனை நாயகனாகவும, தூமம்போல் பிடிக்கடங்காமல் நொடிப்பொழுதிற் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே பலவாறு சிதறி யுருமாறிப் போகுமியல்புடையதும், ஆகவே அசேதனத்திலும் அசேதனமுமான மேகத்தைத்

---

1 'வம்சே ஜாதஸ் ஸவிதுரநகே மாநயந் மாநுஷத்வம் தேவ: ஸ்ரீமாந்...' ஹம்ஸஸந்தேசம், முதற்பத்தியம்.

தூதனாகவும் அமைத்து, அதிலும் கதாநாயகனை 'ஒரு யக்ஷன்' என்று குலம் பெயர் ஏதுமில்லாத அப்ரஸித்தனாகக் கூறும் காளிதாஸனை இங்கு மீறி விட்டனரென்றுரைப்பது மிதமிஞ்சிய மொழியாகாதன்றோ? மேலும் மேகஸந்தேசத்தில் மேகத்திற்குக் கூறிய மார்க்கங்களிலுள்ளப் பிரதேசங்கள் கவியினால் வெகு அழகாக வர்ணிக்கப் பெற்றிருககின்றன வென்றாலும், அவற்றுள் திவ்யக்ஷேத்திரங்கள் வெகு சிறுபான்மையன; ஹம்ஸஸந்தேசத்தில் தூதனை இராஜஹம்ஸத்திற்கு உபதேசிக்கப்படும் வழிகளிலுள்ளப் பிரதேசங்களோ, சிருங்காரரஸத்திற்கேற்றவண்ணம் மிகவும் மனோஹரமாய் வர்ணிக்கப்படுவதுடன், முற்றிலும் சாந்திரஸத்தைக் கைப்பற்றியவராலும் உவக்கக்கூடிய திவ்யக்ஷேத்திரங்களாகவும் இருக்கின்றனவாதலின், இஃது, பொன்மலருக்கு நறுமண மேற்றியதாகுமல்லவா? மேகஸந்தேசத்தையும் ஹம்ஸஸந்தேசத்தையும் ஆதியோடந்தமாய் ஊக்கத்துடன் உற்று நோக்குங்கால், ஸ்ரீவேதாந்ததேசிகர், தாம் இயற்றிய ஸந்தேசகாவியத்திற்கு மேகஸந்தேசத்தையே வழிகாட்டியாகக் கருதினாராயினும், பற்பல விடங்களிற் காளிதாஸனது கருத்துகளையே வெகு நுட்பமாய் அழகாகப் பின்பற்றினாரெனினும், சில விஷயங்களிற் காளிதாஸன் சென்ற வழிகளை மிக நன்றாகச் சீர்திருத்தி அல்லது மாற்றி, இரஸவிசேஷத்தையும் இனிதினும் இனிதாய் இணைத்து, தமது நூலை மேகஸந்தேசத்திலும்

மேன்மை பொருந்தியதாகச் செய்தனரென்று பக்ஷபாதமில்லாமற் பார்க்கும் பண்டிதருக்கு நன்கு விளங்கும். ஆகையால், இங்ஙனம் ஸந்தேசகாவியமொன்றை ஸரளமாய் முதன்முத லியற்றியதாலுண்டான பெருமைக்கு ஸ்ரீகாளிதாஸனும், பின்னர் சீர்திருத்தங்களுடன் ஸகல குணங்களு மமைந்த வழியில் ஸந்தேசகாவியம் வரைந்த புகழுக்கு ஸ்ரீகவிதார்க்கிகஸிம்ஹமும் உரியவராவரென்றுரைப்பது உற்றதாகும். இவ்விதமாய் இவ்விரு நூல்களுக்கும் ஆங்காங்குள்ள ஒற்றுமைகளையும் விசேஷ குணபேதங்களையும் இங்கு மொழிபெயர்த்தெழுதுவதென்றால் விஷயம் மிக விரிவடைவதுடன், அவ்வித ஆராய்ச்சி வடமொழியறியாத தமிழருக்கு அவ்வளவு அவசியமெனத் தோற்றவில்லையாதலால், அவற்றை யான் இங்கு வரைய விரும்புகிறேனில்லை.

வேறு ஸந்தேசகாவியங்கள் எவையெனில்;—உத்தண்டசாஸ்திரி இயற்றிய கோகிலஸந்தேசம், இலக்ஷ்மீதாஸன் செய்த சுகஸந்தேசம், ஸ்ரீரூபகோஸ்வாமியின் ஹம்ஸதூதம், கிருஷ்ணஸார்வபௌமனது பதாங்கதூதம், வெகு ஸமீபகாலத்தில் தைலங்கவ்ரஜநாதன் இயற்றிய மநோதூதம் முதலியவை; இவற்றுள் சில புலவரது கண்களுக்கும் புலப்படாமற் பதுங்கிக் கிடக்கின்றன ; அன்றியும், அவற்றின் அருமையும் அவ்வாறெனவே அறியப்படுகின்றது. உத்தவஸந்தேசம் முதலிய மற்றும் சில ஸந்தேசங்களின் பெயரைச்

செவியுற்றிருப்பவரும் அரிதெனக் கருதுகின்றேன். தோயீகன் என்கிற கவியினால் இயற்றப் பெற்ற ப்ரவணதூதமென்கிற ஸந்தேசகாவியமொன்று மிகப் பண்டைக் காலத்ததென்று எண்ணப்படுகிறது.[1] வாதிசந்திரன் என்பவனியற்றிய ப்ரவணதூதம் மற்றொன்றுண்டு.[2] விக்ரமகவி யென்பவன் அர்ஹந்நேமிநாதனைப் பற்றி நேமிதூதம் என்று ஸந்தேசமொன்று வரைந்திருக்கின்றான். இந்த விக்ரமகவி, மேகஸந்தேசத்திலிருந்து ஒவ்வொரு பத்தியத்தினுடையவும் நான்காவது அடியைத் தனது நூலில் ஒவ்வொரு பத்தியத்திற்கும் முறையே நான்காவது பாதமாக அழகாய் அமைத்திருக்கின்றான். இங்ஙனமே ஜிநஸேநாசாரியன் என்பவன், மேகஸந்தேசபத்தியங்களிலிருந்து ஒன்று அல்லது இரண்டு பாதங்களைப் பெயர்த்தெடுத்து, பார்ச்வாப்யுதயம் என்கிற தனது நூலில் ஒவ்வொரு பத்தியத்திலும் இணைத்து, மேகஸந்தேசம் அனைத்தையும் அதில் அடக்கியிருக்கின்றான். இவ்வாறு இவ்விருவரும் காளிதாஸனது காவியத்திலுள்ள பத்தியங்களின் சில பகுதிகளைக் கொண்டு தமது நூல்களை

---

1. தோயீகனது ப்ரவண்தூதம், வங்காள ஏஷியாடிக் ஸொஸைடியாருடைய மாதாந்தரஸஞ்சிகையின் புதிய தொகுதியில் மனமோஹனசக்ரவர்த்தி என்பவரால் வெளியிடப் பெற்றது. அத்தொகுதியில் முதல் வால்யத்தில் 41 முதல் 71 வது பக்கம் வரையில் உள்ளது.

2. பம்பாய் நிர்ணயஸாகரபிரஸ்ஸிலிருந்து வெளியான காவியமாலாவில் 13 வது தொகுதியில் வெளியாயிருக்கின்றது.

முடித்துத் தமக்கும் தமது நூல்களுக்கும் சிறப்பேற்றியதாகக் கருதினர் போலும்.

இரஸப் பெருக்கிற் பெரிதும் உருவத்திற் சிறிதுமான இம் மேகஸந்தேசத்திற்கு மல்லிநாதன், வல்லபதேவன், பூர்ணஸரஸ்வதீ, கல்யாணமல்லன், ஸநாதநகோஸ்வாமீ, இராமநாததர்க்காலங்காரன், ஹரகோவிந்தவாசஸ்பதி முதலியவர்களால் பற்பல உரைகளும் வரையப்பெற்றுள்ளன. இவற்றுள் மல்லிநாதமஹோபாத்தியாயனுடைய வியாக்கியானம் உலகில் எங்கும் வியாபித்திருப்பதுடன், வியாக்கியானம் வரைவதில் வியாபகனென்று அவன் பெரும் பெயரையும் பெற்றிருக்கின்றான். மல்லிநாதனது வியாக்கியானத்திற்கும் மற்றவரியற்றியவைக்கு முண்டான வேற்றுமை அல்லது ஒற்றுமையை உற்று நோக்கவும் மனமொப்பாத நமது பண்டிதரிற் பெரும்பான்மையோருக்கும் மல்லிநாதனிடம் மஹத்தான குருபக்தியைப் போன்ற விச்வாஸமொன்றுண்டு. அவ்வித நம்பிக்கையைத் தடுப்பதற்கு என்றனால் அல்லது எவராலும் ஆகாதென்று நன்கறிவேனாயினும், பூர்ணஸரஸ்வதீ முதலிய வேறு சிலரது வியாக்கியானங்கள், யான் அறிந்த மட்டும், விரிவான விசேஷ விசாரணைகளைச் செய்வதாலும், இக்காலத்தியவரும் முற்காலத்தியவருமான வித்வான்களால் விருப்புடன் எவ்வகையிலும் ஏற்கக் கூடிய விதமாய் அழகாய் அமைந்திருப்பதாலும், மல்லிநாதனது சில குறுகிய வழிகளை மீறி அவை மிக மேன்மை

யுற்றிருப்பதாகவே மொழியத் துணிகின்றேன். இந்நூலுக்கு வல்லபதேவன் வரைந்த வியாக்கியானமே, வீணாக விரிவான விஷயங்களைக் கூறாமல் வேண்டிய வளவு சுருக்கமாய் விமர்சம் செய்வதுடன், மேகஸந்தேசத்தின் வியாக்கியானங்களெல்லாவற்றிற்கும் காலத்தினாலும் மிக முந்தினதெனத் தெரிய வருகின்றது.[1]

காளிதாஸன் சிருங்காரரஸத்தை வர்ணிப்பதில் மிகவும் விருப்பமுள்ளவனெனவும், அதிலும் விப்ரலம்பசிருங்காரவர்ணனையில் மஹாநிபுணனென்றும் புகழ் பெற்றதற்கு இம் மேகஸந்தேசமே முதற்காரணமென மொழிய வேண்டும். விக்ரமோர்வசீயம், சாகுந்தளம் முதலியவற்றில் இக் கவி விப்ரலம்பசிருங்காரத்தை வர்ணித்தபோதிலும் அவற்றில் ஏதோ சில பாகத்தில் மட்டுமே விப்ரலம்பசிருங்காரம் அமைந்திருக்கின்றனவாதலின், அவை, ஆதியோடந்தமாய் வித்வான்களை வியப்புறச் செய்யுமாறு விப்ரலம்பத்தை விசேஷமாய்ப் பெற்ற இந்நூலுக்கு இணையாகாவென்றால், அது மிகைபடக் கூறதலெனத் தகாது. நாயக நாயிகைகள் ஓரிடத்தில் எதிரிலிருந்து இன்பமனுபவிக்கும் வகைகளை வர்ணிப்பதாலுண்டாகும் இரஸமானது, அவர்

1. வல்லபதேவனுடைய வியாக்கியானத்துடன் கூடிய மேகஸந்தேசம் தேவநாகரலிபியில், மிஸ்டர் இ. ஹுல்ஷ் (E. Hultzsch) என்பவரால் பரிசோதிக்கப் பெற்று, இலண்டன் நகரத்தில் இராயல் ஏஷியாடிக் ஸொஸைடியாரால் வெளியிடப்பட்டிருக்கிறது.

களுக்குப் பிரிவினால் ஏற்படும் பற்பல ஆவல்களுக்கேற்ற மனப்போக்குகளின் மாதிரிகளை மொழிவதாலுண்டாகும் இரஸவிசேஷத்துடன் இணையாவிடின் பெரும்பாலும் பூர்த்திபெறாதென்பது இரஸிகரெனப் பெயர் பெற்ற பண்டிதரின் கொள்கை. . இக் கொள்கையைக் கைப்பற்றிய கவிகளுள் காளிதாஸனே முக்கியமாக இந்நூலைக்கொண்டு முன் சென்றவனாகிறான்.

இந்நூல் இரஸமயமாயிருப்பினும், இஃது கேவலம் சிருங்காரரஸத்திற்கே ஆதாரமாயிருப்பதைக் கருதி, சிலர் இதைப் புறக்கணிக்கக் கூடும். ஆனால் உண்மையில் இது அவ்விதமானதல்ல; ஆம்; ஸாத்விககுண மேலிட்ட வித்வான்களுக்கே பெரிதும் இன்பமளிக்கவல்ல ஸ்ரீராமன் முதலியவரது விஷயமாய் இந்நூலை யியற்றினால், மற்ற ஸாமானிய லௌகிகருக்கு இதைப் படிக்க விசேஷ விருப்பமுண்டாகாதெனக் கருதி, வெகு நிபுணனான இக் கவி, ஒருவனும் கூறாத புதிய விஷயத்தைக் கொண்டு நூலியற்றுபவன் போல், எவரோ யக்ஷ தம்பதிகளையும் மேகத்தையும் சேர்த்து ஒருவாறு கதையின் வரலாற்றை வெளிப்படையாக இணைத்து, இதன் மூலமாய் லௌகிகரான இரஸிகருக்கு இதிற் பிரவிருத்தியை யுண்டாக்கி, முற்கூறியவண்ணம் ஸ்ரீசக்கிரவர்த்தித்திருமகன் ஆஞ்ஜநேயரை அசோகவனத்தில் அருந்துயரனுபவிக்கும் ஸீதாபிராட்டியினிடம் தூதனுப்பும் விஷயத்தை உள்ளடக்கி, இராமாயணத்திலுள்ள சில இன்றியமையா வர்ணனைகளை இடையில் ஆங்காங்கு

உட்புகுந்து ஊக்கத்துடன் நோக்குபவர் இன்புறுமாறு இணைத்து, இதனால் வியங்க்யார்த்தமெனப்படும் அகப்பொருளிலேயே அளவற்ற ஆவலைப் பெற்ற மஹாவித்வான்களான மேன்மக்களுக்கும் இந்நூல் விஷயத்தில் அதிக ஆசையைப் புகட்டியிருப்பதால், இந்நூல் ஸாத்விகஜனங்களால் ஆதரிக்கத்தகாததெனக் கூறுதல் ஆதாரமற்றமொழியாம். மேலும் மதியிற்சிறந்த இக் கவியானவன் ஸ்ரீமந்நாராயணனது திவ்யாவதாரமான ஸ்ரீராமன் வஸித்த இராமகிரியிலுள்ள ஆச்ரமங்களை ஆதியிலும், ஸ்ரீ சிவபெருமான் பிரத்தியக்ஷமாய் வஸிப்பதால் சிறப்புற்ற கைலாஸபர்வதத்தின்மீதுள்ள அளகாபுரியை இறுதியிலும் இசைத்து, சைவ வைஷ்ணவ வேற்றுமையைத் தான் அங்கீகரிக்காதவனென அறிவித்து, ஆகவே மற்றவரும் இங்ஙனம் மதவேற்றுமை மனவேற்றுமை யேதுமின்றி இந்நூலை அன்புடன் ஏற்கவேண்டுமெனக் கருதினான் போலும். அன்றியும், யக்ஷனும் அவனது மனைவியும் ஒரு வருடமளவும் ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்திருக்க வேண்டி நேர்ந்ததையும், பிரிவாற்றாமை யென்பதை என்றுமுணராது நேசப்பான்மை யென்னும் பாசத்தினால் கட்டுண்ட அவ்விருவரும் அக்காலை மிகத் துயரமுற்றுத் தவிப்பதையும், அவ்வளவு நீண்டகாலத்திலும் இயக்கன் ஏகபத்நீவிரதத்தையும் அவனது மனைவி பதிவிரதாதர்மத்தையும் தவறாமலனுட்டிக்கும் வகைகளையும் விரித்துக் கூறுவதான இந்நூல், சிருங்கார

ரஸத்திற்கேயல்ல, உத்தமரான ஸ்திரீபுருடர்கள் அனியோனியமாய் அன்புடனும் ஆதரவுடனும் தர்மசிந்தையுடனும் வாழ்வதற்கேற்ற வழிகளை விளக்குவதற்கும் இன்றியமையாததெனக் கூறவேண்டும்.

இக் கவியானவன், இராமகிரிமுதல் அளகாபுரியீறாக யக்ஷன் மேகத்திற்கு மொழிந்திடும் பாவனையாய் வழிகளையும், வழிகளிலுள்ள நாடு நதி காடு மலை முதலியவற்றையும் தெளிவாக வர்ணிப்பதை நோக்குங்கால், இக்காலத்தில் தமக்கு அருகிற் சுற்றிலுமுள்ள பிரதேசங்களைப்பற்றிய அறிவும் அவற்றை அறிவதில் ஆசையும் அற்றிருக்கும் பாமரரெனத் தகும் சில பண்டிதரைப் போலில்லாமல், நெடுந்தூரத்திலுள்ள தேயங்களுக்குப் போக்கு வரத்துகளுக்கேற்ற சௌகரியமேதுமற்ற அப் பண்டைக்காலத்திலும், இவன் பற்பல தேயங்களைப் பற்றிய அறிவை மிகுதியாகய் பெற்றிருந்தானென நன்கு விளங்குகின்றது. இவனது இரகுவம்சத்தில் இரகுமஹாராஜனது யுத்தயாத்திரை முதலியவற்றின் வர்ணனைகளைப் படிக்குங்கால், இராமகிரிமுதல் கைலைமலைவரையிலுமேயல்ல, இப் பரதகண்டமனைத்தும் இவனுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போலிருந்ததெனத் தெரியவருகின்றது.

தூதனுப்பும் விஷயத்தையே முக்கியமாகப் பெற்ற ஸந்தேசகாவியமென்பது தமிழில் தனிப்பட இல்லாதிருப்பதை அறிந்தும், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் மஹாகவிகளுள் முதன்மை பெற்று விளங்

கிய காளிதாஸன் வடமொழியிலியற்றிய சொற்சுவை
பொருட்சுவை நிரம்பிய இவ்வித அரிய நூல்களைக்
கொண்டு அக் கவிராயனது அல்லது அக் காலத்திய
கவிகளது மிக மனோஹரமான மனப்போக்குகளாகும்
அருஞ்சுவை பொருந்திய அமுதத்தைத் தமிழரும்
அருந்தி ஆனந்தமனுபவிக்கவேண்டுமென்று ஆலோ
சித்தும், மேகஸந்தேசமே காலத்தினாலும் இரஸத்தி
னாலும் மற்றும் பல குணங்களாலும் ஸந்தேசகாவியங்
களுள் முதலிலெண்ணக் கூடியதாயிருப்பதைக் கருதி
யும் அந்நூலை இங்ஙனம் தமிழில் மொழி பெயர்க்க
முயன்றேன். மேகஸந்தேசம் பல குணங்களால்
மேம்பாடுற்றிருப்பதை யறிந்தே, இதைப் பன் முறை
யும் படித்தறிந்த புலவர்கள் இவ்வாறு வேறு பல
ஸந்தேசங்களியற்றியும், இந்நூலிலுள்ள பத்தியங்களி
லிருந்து ஒன்றிரண்டு அடிகளை யெடுத்துத் தாமியற்
றிய ஸந்தேசங்களிலுள்ள பத்தியங்களிற் கிரமமாய்
இணைத்தும், இதற்கு வெவ்வேறு வியாக்கியானங்களை
வரைந்தும், ஆங்கிலம் ஜெர்மன் திபேத் முதலிய தேச
பாஷைகளில் மொழிபெயர்த்தும், தம்மைப் பெரு
மை படுத்திக் கொண்டதுடன், இவ்வரிய நூலினிட
முள்ள அளவிறந்த அபிமானத்தையும் அறிவித்திருக்
கின்றனர். டாக்டர் எச். எச். வில்ஸன் துரையவர்
கள், 1813 ஆம் ஆண்டில், மேகஸந்தேசத்தை ஆங்கி
லத்திற் செய்யுட்களாகவே மொழிபெயர்த்து வெளி
யிட்டிருக்கின்றனர். இவர் அப்பொழுது வங்காளத்தில்

ஈஸ்டு இந்தியா கம்பெனியில் வைத்தியராய் (Assistant surgeon) இருந்தார். இவரது ஆங்கில மொழிபெயர்ப்புடன் கூடிய மேகஸந்தேசமானது, அப்பொழுது இந்தியாவுக்குக் கவர்னர்ஜெனரலாயிருந்த ரைட் ஆனரபுல் மிண்டோதுரையவர்களால் நன்கு ஆதரிக்கப் பெற்று, அவருக்கு அர்ப்பணமும் (Dedication) செய்யப்பட்டிருக்கின்றதெனின், மேகஸந்தேசத்தின் அருமை பெருமைகளை என்னென்று கூறலாம்! வில்ஸன் துரையின் ஆங்கில மொழிபெயர்ப்புடன் கூடிய மேகஸந்தேசத்திலுள்ள பாடங்கள் பெரும்பாலும் நேமிதூதத்தின் முறையைப் பின்பற்றியவையாய், பத்தியங்களின் எண்ணிக்கையும் அதையே அனுஸரித்திருக்கின்றது. இப் புத்தகம் வெளியாய் நூறு வருடங்கள் ஆயின; இவ்வளவு புராதனமான பதிப்பு முற்கூறியவிதம் சில கௌரவங்களைப் பெற்றிருந்தும், பல காரணங்களால் காளிதாஸனுடையதல்லவென்று அறியப்படும் பத்தியங்களும் வெவ்வேறு பாடங்களும் பலவாறு முறை கேடாக இதிற் சேர்க்கப்பட்டு அவ்விதமே மொழிபெயர்க்கப் பட்டுமிருப்பதானது, எனது எண்ணப்படி, அப்பொழுது அவர்களால் நன்கு ஆராய்ச்சி செய்யப்படாத குறையை அறிவிக்கின்றது. இத் தமிழ்மொழிபெயர்ப்பில், காளிதாஸனுடையதென நன்கறியப்படும் பத்தியங்களும் பாடங்களுமே ஏற்றுக்கொள்ளப்பெற்றன; மல்லிநாதனது பாடங்களையே பெரும்பாலும் பின்பற்றினேனாயினும், காளிதாஸனியற்றியதாகக் கருதப்படாத பத்தியங்களை அவ்வரிசையிலிருந்து விலக்கி,

அவற்றின் மொழிபெயர்ப்பை இப்புத்தகத்தின் இறுதியில் ஓர் அநுபந்தமாக இணைத்திருக்கின்றேன். காளிதாஸனுக்குப் பற்றுதலில்லாத பத்தியங்களை விலக்கி வியாக்கியானம் வரைந்தவர் வல்லபதேவனும் பூர்ணஸரஸ்வதியுமே ; ஆனால், இரண்டாம் ஆச்வாஸத்தில் ஆறாவது பத்தியத்திற்குப் பிறகு 'கத்யுக்தம்பாத்...' என்கிற அதிக பத்தியமொன்று காளிதாஸனுடையதென வல்லபன் கருதுகிறான். ஆகையால், மேகஸந்தேசம் வல்லபதேவனது எண்ணப்படி 111 பத்தியங்களடங்கியதாகும். ஆயினும் 640 வருடங்களுக்கு முன் ஸ்ரீமந்நிகமாந்ததேசிகர், எவ்வகையிலும் மேகஸந்தேசத்திற் கேற்றதாயிருக்க வேண்டுமென விரும்பி அருளிச் செய்த ஹம்ஸஸந்தேசத்தில் 110 பத்தியங்களே இருப்பதாலும், ஆச்வாஸமெனும் பெயரால் அதில் இருவகைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பெற்றிருக்கின்றமையாலும், ஒவ்வோர் ஆச்வாஸத்திலும் ஆரம்பமுதல் இறுதிவரையில் வர்ணனையின் வழிகளும் வாக்கியதோரணிகளும் இரஸவிசேஷங்களின் இணைப்பும் பெரும்பாலும் ஒரே விதமாயிருப்பது வெளிப்படையாய் அறியப்படுவதாலும்; மேகஸந்தேசத்திலுங்கூட பத்தியங்களின் எண்ணிக்கையும் ஆச்வாஸபேதங்களும் அங்ஙனமே அமைந்திருக்க வேண்டுமென யான் தீர்மானித்து, அதற்கேற்ப இம்மொழிபெயர்ப்பிலும் பத்தியங்களின் எண்ணிக்கையையும், ஆச்வாஸங்கள் என்று இரு பிரிவுகளையும் ஏற்படுத்தலானேன். காதம்பரீ முதலியதைப் போன்ற வடமொழியிலுள்ள வசனகாவியங்களைத் தமிழில் அவ்

விதமே மொழிபெயர்ப்பது மிகக் கடினமென்று எண்ணியிருந்தும், யான் முதலில் ஒருவாறு அங்ஙனம் செய்ய முயன்றதில், இரஸிகரான கல்விமான்கள் பலர் அதை மனமுவந்து மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டதைக் கண்டு, வசனகாவியமல்லாமலும், விசேஷமான கதையின் வரலாற்றைப் பெறாமலும், கேவலம் இரஸமயமாயமைந்திருக்கும் இத்தகைய பத்தியகாவியத்தைச் சிறிதும் சுவை குன்றாது அழகிய தமிழ்வசன நடையில் மொழி பெயர்த்தலுங் கூடுமென நிச்சயித்து இங்ஙனம் முயன்றேன். உலகவிவஹாரங்களைச் சிறிது முணராமலும், இரஸப்போக்குகளின் வகைகளை யறிய வல்லமையைப் பெறாமலுமிருக்கும் இளம்பிள்ளைகளுக்கு ஸம்ஸ்கிருதபாஷையைக் கற்பிக்கையில், இரஸிகரான வித்வான்களது மனதுக்கே மிகவும் இன்பமளிக்கக் கூடிய மேகஸந்தேசம் போன்ற காவிய முதலியவற்றை, அநாகரிகரால் அறிஞரெனக் கருதப்படும் சில அரஸிகசிரோமணிகள் அப்பிள்ளைகளுக்கு முதன் முதலிற் கற்பிக்கமுயன்று, பத்தியங்களைப் பதம்பதமாகப் பகுத்து, அரும்பொருளை அனுதரித்து, எளிதான அழகிய வழிகளால் அறிந்து அனுபவிக்கக் கூடிய இனிய விஷயங்களை வீணிற் கசக்கி விரஸமாகச் செய்து, மேன்மை பொருந்திய நூலுக்கு இழிவு உண்டாக்குவதை நோக்கி, யான் மனம் ஸஹியாமல், மேகஸந்தேச பத்தியங்களிலடங்கிய பதங்களின் பொருட்களையும் கருத்துகளையும் ஒருமிக்க அந்நூலிலுள்ளவாறே இரஸப்பெருக்கெனும் அமுதத்தில் ஆழ்த்தி அவ்விதமே ஸம்ஸ்கிருதமாணாக்கருக்கு மாசற்றவழி

யில் அறிவிக்க வேண்டுமென விரும்பியும் இந்நூலைத் தமிழில் இவ்வண்ணம் எழுதலானேன். அவசியமான அனேக விடங்களிற் பதங்களின் பொருட்கள் வாக்கியங்களின் கருத்துகள் முதலியவற்றை வெளியிடுவதில் வடமொழியில் வியாக்கியான மியற்றியவர் வரைந்துள்ள அபிப்பிராயபேதங்களை விளக்குவதன் பொருட்டும், ஆங்காங்கு வாக்கியங்களிலடங்கியுள்ள விசேஷமான உட்கருத்துகளை உணர்த்துவதற்காகவும், இதிஹாஸங்களெனப்படும் சில கிளைக் கதைகளையும் மற்றும் பல விஷயங்களையும் நன்கு அறிவிப்பதற்கென்றும் அந்தந்த பக்கத்தில் ஓர் உரையையும் வரைந்து இணைத்திருக்கின்றேன். அனேக நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த காளிதாஸனால் இந் நூலில் கூறப்பட்டிருக்கும் இராமகிரி முதல் அளகைவரையிலுமுள்ள பிரதேசங்களின் பெயர்கள் அல்லது உருவங்கள் இப்பொழுது பலவாறாய் மாறுபாடடைந்திருப்பதைக் கருதி, இக்காலத்தில் வழங்கப்படும் விதமாக அவற்றின் விவரங்களைத் தெளிவாகக் கூடுமாறு விளக்கி, இந்நூலின் இறுதியில் அவற்றின் விஷயமும் மற்றோர் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டுளது. ஆதலின், ஸம்ஸ்கிருதம் கற்றவருக்கும் ஸம்ஸ்கிருதமறியாத் தமிழருக்கும் இந்நூல் இனிப்பூட்டுமெனக் கருதுகின்றேன்; எனினும், மிக நன்றாகப் பயின்றவரது மனதும், தனதிடம் நம்பிக்கையற்றிருப்பது இயல்பாதலின், அறிவிற் குன்றிய எனது மொழிபெயர்ப்பான இந்நூலைக் கல்விமான்கள் கண்டு மனமொப்பி யளிக்கும் கருத்தைப் பெறுமளவும், இஃது நன்கமைந்ததென நினைக்கின்றேனில்லை.

MADRAS,
1-5-1913.

இங்ஙனம்
ஆயுர்வேதபூஷண
மேல்பாக்கம், துரைஸ்வாமி ஐயங்கார்.

ஸ்ரீ

மேகஸந்தேசம்

முதல் ஆச்வாஸம்

ஒரு [1]யக்ஷன், தனது கடமையில் தவறுதலுற்று, மனதைக் கவரும் வடிவழகு வாய்ந்த மனைவியின் [2]பிரிவை யுண்டுபண்ணியதால் தாங்க வியலாததும், ஓராண்டளவும் அனுபவிக்க வேண்டுவதுமான—தன் பிரபுவான குபேரனது—சாபத்தினால் மறைவுற்ற மஹிமையை யுடையவனாய், ஜானகி நீராடி மிகவும் புனிதமான நீர்களைப் பெற்றனவும், நிரம்பவும் செழிப்பாக நிழலைத் தந்து அழகாய் நிற்கும் மரங்களை யுடைய

1. யக்ஷன் = தேவர்களில் ஓர் ஜாதி.

2. பிரிவை யுண்டுபண்ணியதால் தாங்க வியலாததும் என்பதற்குப் பதிலாக 'காந்தாவிரஹகுருணா' என்பதற்கு மனைவியின் பிரிவாற்றாமையை யுபதேசிக்கும் ஆசிரியனும் [கனவிலும் காதலியின் பிரிவாற்றாமையை யுணராத யக்ஷனுக்கு 'இல்லாளின் விரஹம் இவ்விதமானது' என்று சாபமே இப்பொழுது புதிதா யுபதேசிப்பதுபோ லிருப்பதால், அச்சாபத்தை இப் பிரிவாற்றாமையை அறிவிப்பதற்கு ஆசிரியனெனக் கொள்ளவேண்டும்.] என்று பூர்ணஸரஸ்வதி வரைந்துள்ளான்.

வையுமான [1]இராமகிரியிலுள்ள ஆச்ரமங்களின்கண் வாஸம் செய்து வந்தான். 1.

காதலியை விட்டுப் பிரிந்தவனும், ஆகவே [2]கனகமயமான கங்கணம் நழுவி விழுந்தமையால் சூனியமான கரத்தின் மணிக்கட்டையுடையவனுமான அக் காமுகி, *அம் மாமலையிற் சில மாதங்களைப் போக்கிய பின், [3]ஆடிமாதத்து முதல் தினத்தன்று, விளையாட்டாகக் குன்றத்தின் சாரலைக் கொம்புகளைக் கொண்டு குறுக்காயிடிக்கும் குஞ்சரம்போல் கண்ணைக் கவர்வதான மலைச்சாரலைத் தழுவிநிற்கும் கார்முகிலொன்றைக் காணலானான். 2.

குபேரனது குற்றேவற்காரனான [4]அவ்வியக்கன், தாழம்பூக்களைச் செழிப்பிக்கக் காரணமான அக் கார்முகிலுக்கு எதிரில் ஒருவாறு வருத்தமுற்று நின்று, கண்ணீரைப் பெருகவிடாமற் பெருமுயற்சியால் அடக்கியவனாய் நெடு நேரம் ஏதோ எண்ணங்கொள்ளலாயினன்; கவலையற்றுக் களித்திருப்பவனது மனதும், மேகத்தை நோக்குங்கால் மாறுதலுற்று மழுக்கங்கொள்ளும்; இத்தகைய காலத்திற் கழுத்தைத் தழுவி

1. சித்திரகூடமலை யென்று சிலர்.

2. விரஹிகள் ஒரு கரத்தில் மட்டும் வளையொன்று இட்டுக்கொள்வது முறை. [பிரிவாற்றாமையால் இவன் மிகவும் இளைச்சுப்போனதால் கையிலிருந்த கங்கணம் நழுவிப் போயிற்று எனக் கருத்து.]

3. ஆடிமாதத்தின் இறுதியில் (ஆஷாடஸ்ய ப்ரசமதிவஸே) என்று வல்லபதேவனுடைய பாடம்.

4. இயக்கன் = யக்ஷன்.

ஆலிங்கனம் செய்வதில் ஆவலுள்ள நாயகி நெடுந்
தூரத்திற் பிரிந்திருக்கையிற் கேட்கவும் வேண்டுமோ!
3.

அவன், ஆவணிமாதம் நெருங்கி வருங்கால்,
தனது இன்பமுற்ற இல்லாள் உயிர் பிழைத்திருத்தலை
உத்தேசித்து, தன் க்ஷேமவிருத்தாந்தத்தை மேகத்
தின் மூலமாகக் கூறி யனுப்ப விருப்பங்கொண்டு,
அவ் வம்புதத்தினிடம்[1] அன்பு பாராட்டியவனாய், அப்
பொழுதே மலர்ந்த குடமல்லிகைமலர்கள் கொண்டு
[2]அர்க்கியமளித்து, பிரீதியை முன்னிட்டு அதற்கு
நல்வரவு கூறினான். மன்மததாபத்தினால் மனநோ
யுற்றவர், அறிவுடையோரிடத்தும் அசேதனங்களிடத்
தும் தம தெளிமையை முறையிடு மியல்பின ராதலின்,
அவ்வியக்கன், ஆவலதிகரித்தமையால்—புகை ஒளி
நீர் வாயுவென்னும் இவற்றின் சேர்க்கையாலாகிய
மேகமெங்கே! கூர்மையான புலன்களைப் பெற்றப்
பிராணிகளைக்கொண்டு செப்பி யனுப்பக்கூடிய செய்
திகளெங்கே!—என்ப் பகுத்தறிய வல்லமையற்ற
வனாய், அம் மேகத்தை நோக்கிப் பின் வருமாறு வேண்
டத் தொடங்கினான். 4. 5:—

"அப்பா! நீ புவனத்திற் புகழ்பெற்ற புஷ்கலா
வர்த்தமென்னும் மேகங்களின் குலத்தில் உதித்தவ
னெனவும், மஹேந்திரனுடைய மனதுக்கிசைந்த
வண்ணம் மாற்றுருவங்களெடுக்கவல்ல அதிகாரபுரு
டனெனவும் யான் அறிவேன்; ஆகவே, நற்குணம் நிரம்

1. அம்புதம் = மேகம்.
2. அர்க்கியம் = பூஜோபசாரம்.

யியவரிடத்து யாசித்தற்பயனுறாமற்போயினும் சிறப்பு, அவ் வேண்டுகோள் இழியவரிடத்துப் பயன் பெறினும் பெருமையுறாது எனக் கருதி, யான் விதிவசத்தினால் வெகு தூரத்திற் காதலியை விட்டு விலகியவனாய் உன்றனிடம் வேண்டிக்கொள்ள வந்தேன். தண்ணீரைத் தந்தருளும் கார்முகிலே! நீ, தாபத்தினால் தவிப்ப வருக்கெல்லாம் சரணமா யிருக்கின்றனையாதலின், தனபதியின்[1] சினத்தினாற் பிரிக்கப்பெற்றுப் பரிதவிக்கும் என் பிரியதமைக்கு எனது செய்தியை அறிந்தேகிச் செப்புவாயாக; நீ செல்லவேண்டிய இடமோ, யக்ஷேச்வரருடைய வாஸபூமியான **அளகை** யென்னும் புகழ்பெற்ற நகரம்; அஃது, வெளிப் புறத்துச் சிங்காரவனத்தின்கண்[2] வீற்றிருக்கும் சிவபெருமானது சிரஸஸிலுள்ள இந்துவின் சந்திரிகையினால் மெழுகப்பெற்று மாசற்ற மாட மாளிகைகளை யுடையது. நீ வாயுமார்க்கத்தினில் ஏறிச் செல்லுங்கால், வெளிதேசம் சென்றவரின் வனிதைகள், இனி தமது கணவர் கடுக வந்திடுவரென நம்பி [3]ஆறுதலுற்று, முன்னெற்றிமயிர்முனைகளை மேற்புறமாகத் தள்

---

1. தனபதி - குபேரன்.

2. கைலாஸமலையைச் சார்ந்த கந்தமாதனம் என்கிற பெரிய குன்றதனின்மீது தென்புறமாயுள்ள கந்தமாதனம் என்கிற அதே பெயர்கொண்ட உத்தியானவனமே, இங்குச் சிங்கார வனம் என்கிற பெயரால் குறிக்கப்படுகிறது என்று பூர்ண ஸரஸ்வதி வரைகின்றான்.

3. மாரிகாலத்தில் நீர்கொண்ட மேகங்களைக் கண்ட விரஹிகள், ஆவலதிகரித்து மனைவிகளை விட்டுப் பிரிந்திருக்க மனமொப்பார்.

ளிக்கொண்டு உன்றனை உற்றுநோக்கப் போகின்றனர்; ஏனெனில், என்றனைப் போல் பிறருக்கு அதீனமான பிழைப்பைப் பெறாத மற்றெந்த மனிதன்தான், நீ ஆகாயத்தில் ஆயத்தமாய்த் தோன்றியிருக்க, பிரி வாற்றாமையினால் மிக மனத்துயரமுற்ற மனைவியை இங்ஙனம் உபேக்ஷித்திருப்பன்! 6-8.

"இப்பொழுது மாருதமும் மெல்ல மெல்ல நீ செல்லவேண்டிய திசைநோக்கி உன்றனை எங்ஙனம் வருவதற்கு[1] ஏவுகின்றதோ, மிகச் செருக்குற்ற சாதகபக்ஷியும் இதோ நின்றனக்கு இடதுபுறமாய் நின்று எங்ஙனம் இனிதாகக்[2] கூவுகின்றதோ, அதற் கேற்றவாறு, [3]நாரை யென்னும் பறவைகள் நேத்தி

---

1. வாயுவானது, மேகத்தின் பிரயாணம் பயனுள்ள தாகுமென அதை உடனே புறப்படத் தூண்டுவதுபோல் தோற்றுகிறது எனக் கருத்து. [ஒருவன் போகவேண்டிய திக்கை நோக்கி அவனுக்கு அனுகூலமாய் வாயு மெதுவாக வீசுமானால், போகும் காரியம் கைகூடுமென்று சாஸ்திரம். 'பவநஸ்யாநுகூலத்வாத் ப்ரார்த்தநாஸித்திசம்ஸிந:'—தான் போகும் திசைநோக்கி வாயு அனுகூலமாய் வீசுவதால் கோரிக்கை நிறைவேறு மென்று அஃது குறிக்கின்றது—என இரகுவம்சம்.]

2. சாதகபக்ஷி இடதுபுறமாயிருந்து கூவுமாயின் காரியம் ஜயமாகும்—என வராஹமிஹிரன்.

3. நாரை, கொக்கு முதலிய பறவைகள் மாரிகாலத்தில் ஆகாயத்திற் பறந்தோடுவதும், அப்பொழுது அவை கருத்தரிப்பதும் வழக்கமென்று கவிகள் வர்ணிக்கின்றனர்; ஸ்ரீமத்ராமாயணத்திலும் இங்ஙனம் வர்ணிக்கப்பட்டுளது—"மேகாபி காமா பரிஸம்பதந்தீ ஸம்மோதிதா பாதி பலாகபங்க்தி:"—

ரங்களால் நோக்க நேர்த்தியா யிருக்குமாறு வானத்தி னில் வரிசையாகப் பறந்துகொண்டு—நினதிடம் கருத் தரிக்கும் பழக்கத்தைப் பெற்றிருப்பதால்—நின்றனை நாடி வரப்போவது [1]நிச்சயமே. ஆகையினால், நீ இடை யூறின்றி இங்கிருந் தேகியவனாய், கழியும் நாட்களைக் கணக்கிடுவதற் கருத்துகொண்டு, பதிவிரதாதர்மத் தைப் பரிபாலித்துவரும் உனது [2]உடன்பிறந்தோனது காதலியை அபாயமின்றி உயிர்பிழைத்திருக்கக் காணப்போவதுண்மை. மலர்களைப் போல மிகவு மெளிய வலிமையைப் பெற்ற மங்கையரின் இருதயம் அந்த க்ஷணத்தில் ஆபத்துறுவதற்கு ஆயத்தமா யிருந் தும், ஆசையென்னும் பாசமானது கணவனை விட்டுப் பிரிந்திருக்குங்கால் அதைக் கட்டிக் காத்தவரும். எங்கும் கிளைத்தெழும் [3]காளான்களால்—புவியைச் சூனியமாக்காது—செழிக்கச் செய்ய வல்லதும், செவி களுக்கினியதுமான நினது முழக்கத்தைக் கேட்டு, மானஸமென்னும் பொய்கைக்குப் போகப் பேரவா

மேகங்களிடம் காதல்கொண்டு, களிப்பூட்டப் பெற்று, அவற் றினூடே வரிசையாகப் பறந்தோடும் நாரைகள் மிகவுமழ காய் விளங்குகின்றன; என்று.

1. இதனால் மேகத்திற்கு உத்ஸாஹமுண்டாய் பிர யாணமாகுமென்று நினைத்து, அதன் நன்மை கூறப்பட்டது; பிறகு தன் காரியமும் பயன் பெறுமென்று ஊஹித்துக் கூறு கிறான்.

2. அதிக நேசப் பற்றுண்டாயிருப்பதாலும், பரோப காரியானதாலும் மேகம் தர்மத்தினால் தனக்கு உடன்பிறந்த தெனக் கருதுகிறான்.

3. காளான்—நாய்க்குடைபோன்ற ஓர் பூண்டு.

கொண்ட இராஜஹம்ஸங்களும், கைலைமலையளவும், தளிர்போன்ற தாமரைக்கிழங்குகளை [1]ஆற்றுணவாகப் பெற்று ஆகாயமார்க்கத்தில் உன்றனுக்குத் [2]துணையாக வரப்போகின்றன. யாதொரு மலையானது மாரிகாலந்தோறும் நினது சேர்க்கையைப் பெற்று, வெகு காலம் பிரிந்திருந்ததா லுண்டாகிய வெப்பத்தினல் உஷ்ணமான [3]பாஷ்பத்தைப் பெருக்கி, உனதிடமுள்ள [4]ஸ்நேஹத்தை வெளியாக்குகின்றதோ, அத்தகைய அரிய நண்பனும், புருஷ ரனைவராலும் பணியத் தகுந்த ஸ்ரீராமனது திருவடிகளின் சின்னங்

---

1. ஆற்றுணா - வழிகளில் உண்பதற்குக் கொண்டுபோகும் கட்டுச் சோறு.

2. தனிவழியிற் செல்வது தகாது என்று சாஸ்திரங் கூறுவதால், நற்சகுனங்கள் நேரிடுவதற்கேற்ப, ஹம்ஸம் முதலியவை வழித்துணையாகவும் ஏற்படும் எனக் கருத்து, [அன்னப்பறவைகள், மாரிகாலத்திற் கைலாயத்திற்கு அருகிலுள்ள மானஸமென்னும் திவ்ய ஸரஸ்ஸுக்குப் போகும் எனக் கவிகள் கூறுவது முறை.]

3. பாஷ்பம் = நீராவி, கண்ணீர் ; 4. ஸ்நேஹம் = பிசுபிசுப்பான ஈரம், அன்பு என்று ஒவ்வொன்றுக்கும் இரு பொருள்களுண்டு. [ஒருவன் தன் தோழனை விட்டு வெகுநாள் பிரிந்திருந்து மறுபடி அவனுடன் சேர்ந்தால், அப்பொழுது ஆனந்தபாஷ்பத்தைப் பெருக்கி அன்பைவெளியாக்குவது போல், மலையானது தன் தோழனெனத் தகும் மேகத்தை விட்டுப் பிரிந்து நெடுநாட்க ளானபின், மீண்டும் அதனுடன் சேருங்கால், அதன் நீர் தன்மேல் விழுவதால், நீராவியை ஆனந்தபாஷ்பம் போல் கக்கி, பிசுபிசுப்பான—நேசப்பான்மையெனத் தகும்—ஈரங்கொள்ளுமெனக் கருத்து.]

களைப் பெற்ற அடிவாரத்துடன் கூடியதுமான இவ்
[1]வுயர்வுபெற்றபர்வதத்தைத் தழுவிக்கொண்டு,போய்
வருவதாகக் கூறி, அதைப் பெருமை படுத்துவாயாக.
9-12.

“நீர்கொண்ட மேகமே! நீ, அவ்வப்பொழுது சோர்வடையுங்கால் சைலங்களின்மீது தங்கி யிருந்தும், அடிக்கடி மெலிவுறும் பொழுது நதிகளின் மிகத் தெளிவான தண்ணீரைப் பருகிக்கொண்டும் எந்த வழியினால் எளிதில் ஏகலாமோ, அவ்விதமான மார்க்கமனைத்தையும் முதலில் யான் சொல்லக் கேள்; அதன் பிறகு, எனது மனைவியின்பொருட்டுச் செப்பப்படும் செவிகளுக் கின்பமான செய்திகளை என்றனிடமிருந்து செவியுறப்போகின்றனை[2] 13.

“[3]ஸித்தாகளின் ஸுந்தரகுணமமைந்த சிறு மங்கையர்கள்,—இதென்னை! மாருதம் மலையின் சிகரத்தை இழுத்துச் செல்வதுபோலிருக்கின்றதே!—எனப் பிரமித்து, அஞ்சியஞ்சி அண்ணாந்து நோக்கி, உனது அரிய உத்ஸாஹத்தை யறிய, நன்கு செழித்து வளர்ந்த நீர்வஞ்சிக்கொடிகளடர்ந்த இவ்விடத்திலிருந்து கிளம்பி, மார்க்கத்தில் திக்கஜங்களினது திரண்ட துதிக்கைகளின் மதித்தச் செயலிலிருந்து மீண்டு, வடதிசைநோக்கிச் செல்லக்கடவாய். 14.

“இதோ முன்புறத்தில் மணிகளது ஒளிகளின்

---

1. உயர்வு = உன்னதம், பெருந்தன்மை.

2. முதல் ஆச்வாஸத்தில் மார்க்கங்களும், இரண்டாம் ஆச்வாஸத்தில் செய்திகளும் செப்பப் படும்.

3. ஸித்தர் = தேவஜாதியில் ஓர் வகுப்பினர்.

திரள்போல் தோற்றும் இந்திரதனுஸ்ஸின் முனையொன்று, [1]புற்றின் உச்சியிலிருந்து உதிக்கின்றது.! மனோஹரமான காந்தி பொருந்திய மயிற்றோகையணிந்து ஆயர்வேடம் பூண்ட அத் திருமாலின் மேனி போல், இவ்விந்திரதனுஸ்ஸின் சேர்க்கையினால் நினதுருவம் நீலநிறத்தை நிரம்பவும் பெற்றுச் சிறப்புறப் போகின்றது. 15.

“வேளாண்மையில் நற்பயன் விளைவது நின்றனக்கு அதீனமென நினைத்து நேசப்பான்மை கசிந்து குளிர்ந்தனவும், புருவநெறிப்பு முதலிய விலாஸங்களறியாதனவுமான நாடுகளிலுள்ள நங்கையரின் நேத்திரங்களால் நீ [2]அருந்தப்பெற்று, அப்பொழுதே கலப்பையினால் நன்குழப்பெற்று [3]நறுமணம் வீசும் மாலம் என்னும் ஓர் மேடான பூமியின் மேலேறி, சிறிது மேற்றிசையாகத் திரும்பி, [4]வேகமாகச் சென்று, மீண்டும் வடதிசைநோக்கி ஏகுவாயாக. 16.

---

1. இந்திரதனுஸ்ஸு ஜலத்திலுண்டானால் அநாவிருஷ்டியும், பூமியிலிருந்துதித்தால் பயிர்ச்சேதமும், மரத்திலுதித்தால் மனிதருக்கு வியாதியும், இரவிலுண்டானால் அமைச்சருக்கு நாசமும், புற்றிலிருந்துதித்தால் ஆயுதபயமும் ஏற்படும் என்று சாஸ்திரம் கூறுவதால், அதைக் கொண்டு, புற்றிலிருந்து இந்திரதனுஸ்ஸு உதிப்பதாகக் கவியினால் மொழியப்பட்டது.[இந்திரதனுஸ்ஸைக் காண்பது பிரயாணத்திற்கு மங்களகரமென்று பெரியோர் மொழிவது முறை.]

2. நேத்திரங்களால் அருந்தல் = கண் குளிரப் பார்த்தல்.

3. கோடைகாலத்து வெயிலால் நன்குலர்ந்த பூமியில் சிறிது மழை பெய்ததும் உழுங்கால் ஒருவித மணம் உண்டாவதியல்பு.

4. நடுவில் தங்குவதற்குத் தகுந்த மலைகளில்லாமையால், அங்கு வேகமாய்ச் செல்வது அவசியமாம்.

"அப்பால் [1]**ஆம்ரகூடம்** என்னும் குன்றமொன்று, வழிகளைக் கடந்து வந்த களைப்புடன் கூடியதும், மழையைப் பொழிந்து அடவியின் அனலை அவித்துதவி செய்ததுமான உன்றனைத் தலையாலே தாங்கப் போகின்றது ; ஏனெனில், [2]இழியவனுங்கூட, தோழனொருவன் தனதிடமிருப்பதற்கு நாடிவருங்கால், அவன் முதலிற் பெற்ற நன்மையைக் கருதி, பராமுகமாயிருக்கின்றானில்லை ; அங்ஙனமிருக்க, அவ்வளவு [3]உயர்வு பெற்றபர்வதம்,உதவிசெய்த உனதிடம் பக்ஷமாயிருக்குமெனக் கூறவும் வேண்டுமோ? நன்கு பழுத்துக் குலுங்கும் கனிகளால் துலங்குவதான வனத்திலுள்ள மாமரங்களால் மறைக்கப் பெற்ற பாரிசங்களையுடைய அப் பர்வதம, தனது சிகரத்தின்கண் [4]நீலவேணிக்கு நிகரான நிறம் பொருந்திய நீ ஏறியிருக்குங்கால், நடுவிற் கறுத்தும் வெளிப்புறமெங்கும் விசாலமாய் வெளுத்துமிருக்கும் பூதேவியின் கொங்கையோவெனத் தேவதம்பதிகள் கண்டு களிக்கக் கூடிய நிலைமையை நிச்சயமாய்ப் பெறப்போகின்றது." மறவரது மங்கையர் மகிழ்வுடன் விளையாடியனுபவித்த கொடிவீடுகளுடன் கூடிய அக் குன்றத்தினிற் சிறிது நேரம் நீ தங்கியிருந்து, ஆங்கு நீரைச் சொரிந்தபின் நினதுடல் இலகுவாகப் போகுமாதலின், நீ வெகு துரித

1. கொடிமுடியில் மாமரங்கள் விசேஷமாயிருப்பதால் 'ஆம்ரகூடம்' என்று பெயர் வந்தது.

2. இழியவன்—அற்பன், உருவத்திற் சிறியது (மலை) என்றும் பொருள்.

3. உயர்வு—உன்னதம், மேன்மை என இரு பொருள்.

4. நீலவேணி—நீலநிறமான தலைப்பின்னல்.

மாகச் சென்று, அதற்கப்புறமுள்ள பாதையையும் கடந்தேகக் கடவாய்; அப்பால், வேழத்தினுடலில் வரிவரியாயிடப் பெற்ற விபூதிக்கோடுகளைப் போல், **விந்தியமலையின்** கற்களால் கரடுமுரடான அடிவாரத்தினிற் பலவாருகச் சிதறியோடும் [1]**நர்மதை** யென்னும் நதியைக் காணப்போகின்றனை. 17-19.

"அப்பா மேகமே! நீ தண்ணீரைக் கக்கிய பின், காட்டானைகளின் [2]திக்தமான மதநீர்ப் பெருக்குகளால் [3]வாஸனை யேற்றப் பெற்றதும், நாவல்மரப் புதர்களால் வேகந்தணிந்த வெள்ளத்தையுடையதுமான நர்மதாநதியின் நீரை யெடுத்தேகவேண்டும்; அங்ஙனம் செய்தனையாயின், வாயுவானது, [4]அந்தஸ்ஸாரத்தைப் பெற்ற உன்றனை அசைத்துச் சிதறடிக்க

---

1. விந்தியமலையை யானையாகவும், நர்மதையின் பிரவாஹங்களை அந்த யானையினுடலி லிட்ட விபூதிக் கோடுகளாகவும் கருதவேண்டும்.

2. திக்தம் = மணமுள்ளது, கசப்பானது. 3. வாஸனை யேற்றல் = மணமுண்டாக்குதல், பாவனை செய்தல் (சில கெட்டிப் பொருட்களை, சில திராவகங்களில் ஊறவைத்து, அத் திராவகங்களின் ஸத்துக்களை அக் கெட்டிப் பொருட்களிலேற்றுவது பாவனை.) 4. அந்தஸ்ஸாரம் = நீரை உள்ளடக்கியது, நல்ல வலிமையுள்ளது. [நீராகும் கபத்தைக் கக்கி, சுத்தமான குடலைப் பெற்ற மேகமாகும் மனிதன், கசப்பான மதநீர்களாகும் மருந்துகளால் பாவனை செய்யப்பெற்றதும் இலகுவானது—அஜீர்ணம் பண்ணாதது—மான ஜலமாகும் கஷாயத்தைப் பருகி, நல்ல வலிமையைப் பெற்று, பின்பு காற்ருகும் வாதரோகத்தினால் பீடிக்கப்படமாட்டான் என்கிற ஓர் உட்கருத்துண்டு.]

வல்லமையற்றதாகும்; ஆம்; வறுமையானது [1]இலாகவத்திற்கும், வளமைக் [2]கௌரவத்திற்கும் காரணமாகின்றன. ஆங்கு, சிறிது வளர்ந்து வெளிவந்த தாதுகளால் பசுங்கபில நிறமான கடப்பம் பூவென்ன, நீரோரங்களில் அப்பொழுதே முளைத்துவரும் முதலரும்புகளையீன்ற நில்வாழைகளென்ன இவற்றைக் கடித்துக்கொண்டும், வெயில் முதலியவற்றால் வெந்துபோன வனத்திலுள்ள நிலத்திலிருந்து நிரம்பவும் பரவிவரும் நறுமணத்தை முகர்ந்துகொண்டும் திரியும் மான்களானவை, தமது அச்செயல்களால், நீ அவ்வழி நெடுக நீர்த்துளிகளைச் சொரிந்துகொண்டேகியதை அறிவிக்கப்போகின்றன. அன்பார்ந்த நண்பனே! நீ எனது நேசத்தின்பொருட்டுக் கடுகச் செல்லவேண்டுமெனக் கருதுவாயாயினும், மருகமலர்களால் மணம் பெற்றிருக்கும் மலைகள் தோறும் நின்றனக்குக் காலதாமதம் நேரிடுமென நினைக்கின்றேன்; அன்றியும், கானகத்து மயில்கள், கண்ணீர் ததும்ப [3]அகவல் பாடி முகமன் கூறி [4]முன்வந்து நின்றனை மேன்மைப் படுத்துங்கால், நீ விரைவாகச் செல்ல முயல்வதெங்ஙனம்? 20 - 22.

"பின்னர், நீ, எவ்விதத்திலேனும் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, **தசார்ணம்** என்கிற தேசத்திற்கு அருகிற் சென்றதும், அத் தேயம், சிறிது மலர்ந்த நண்

1. இலாகவம் = இலேசு, எளிமை.
2. கௌரவம் = பாரம், மேன்மை.
3. அகவல் = கேகா என்கிற மயிலின் சப்தம்.
4. முகமன் = உபசார மொழி.

ணிய முனைகளையுடைய தாழம்பூக்களால் வெண்மையான வேலிகளைப் பெற்ற உத்தியானவனங்களை யுடையதாகவும், கூடு கட்ட முயன்ற காகம் முதலிய ஊர்ப் பறவைகளின் ஆர்ப்பரிப்பால் குழப்பங்கொண்ட அரசு முதலிய பூஜைக்குரியக் கிராமவிருக்ஷங்களுடன் கூடியதாகவும், நன்கு முதிர்ந்த கனிகளால் கறு நிறமான நாவல்மரங்களால் மனோஹரமாகவும், அன்னப்பறவைகள் சிலநாள்மட்டும் தங்கியிருக்கத் தகுந்தவோரிடமாகவும் [1]ஆகப்போகின்றது. அத் தேயத்தின்கண், திசைகளெங்கும் புகழ்பெற்று விளங்கும் **விதிசை** யெனப் பெயர்கொண்ட இராஜதானி யொன்றுண்டு; நீ அவ்விடம் சென்று, உனது ஆவலுக்குத்[2] தகுந்தவோர் பெரும் பயனை உடனே பெறப்போகின்றனை; எங்ஙனமெனில், ஆங்கு **வேத்திரவதீ** யென்னும் ஆற்றின் கரையோரத்தி லுண்டாகும் முழக்கத்தினால் மனோஹரமானதும், அங்குமிங்கு மசையும் அலைகளுடன் கூடியதும், மிகவும் இனியதுமான தண்ணீரைப் புருவ நெறிப்புடன் கூடிய பெண்மணியின் முகத்தைப்போல் [3]பருகப்போகின்றனையே!

---

1. மாரிகாலத்தில் மழை பொழியுங்கால் தாழை மலர்வதும், பக்ஷிகள் பரபரப்புடன் கூடு கட்டிக் கொள்வதும், நாவல் பழுப்பதும், ஹம்ஸங்கள் மானஸஸரஸ்ஸிற்குப் போவது மியல்பு.

2. ஆவல் — நீரைப் பருகுவதில் ஆசை, காதல் என இரு பொருளுண்டு.

3. அந் நதியாகும் பெண்மணியின், கரையோரத்தி லுண்டாகும் முழக்கமாகும் மணித மென்கிற தொனியையுடையதும், அலைகளாகும் புருவநெறிப்புடன் கூடியதுமான ஜலமாகும் முகத்தை, மேகமாகும் காமுகி அருந்துவதாக உட்கருத்து.

அந் நகரத்திற்கு அருகில் நீசை என்கிற குன்றத்தின் மீது இளைப்பாறுவதன் பொருட்டுத் தங்குவாயாக; அப்பொழுது, நினது சேர்க்கையினால் கடப்பமரங்கள் [1]நன்கு விகஸித்த மலர்களை யீன்று நிற்க, அவற்றால் அப் பர்வதம் [2]புளகாங்கிதமானது போல் தோற்றும். அக் குன்றமானது, விலைமாதர் விளையாடுங்கால் அவரது மேனிகளிலிருக்கும் பரிமளங்களை வெளியிற் பரவச் செய்யும் [3]குஹாகிருஹங்களால், அந் நகரத்திலுள்ள ஜனங்களின் தட்டுத்தடையில்லாத வாலிபதசைக்கு இயல்பான விலாஸச் செயல்களை விளங்கச் செய்கின்றது. இங்ஙனம் நீ இளைப்பாறியபின், பூப் பறிக்கும் பெண்கள் தமது கபோலங்களிலுண்டாகும் வியர்வையைத் துடைக்கையில், கரங்கள் தாக்கி வாடிய காதிலுள்ள நைதல் மலருடன் கூடிய அவரது முகங்களுக்கு நீ நிழலைக் கொடுத்து, நொடிநேரம் அம்முகங்களின் பரிசயத்தைப் பெற்று, காட்டாறுகளின் கரைகளிலுள்ள சோலைகளிலுண்டான முல்லைமொட்டுகளை நூதன நீர்த்திவலைகளால் நனைத்துக்கொண்டே அப்புறம் அசைந்து செல்வாய். 23 - 26.

"அப்பால் வடதிசைநோக்கிச் செல்லும் உனக்குப் பிற் கூறப்படும் பாதையானது சிறிது [4]சுற்றாக

1. மயிர்ச் சிலிர்க்கைகளுக்கு - மலராத மொட்டுகளை யீன்று - எனக் கூறுவதே சான்றுமெனக் கருதி 'அப்ரௌட புஷ்பை:' என்கிற பாடத்தைப் பூர்ணஸரஸ்வதி வரைகிறான்.

2. புளகாங்கிதம் -- மயிர்ச் சிலிர்க்கை.

3. குஹாகிருஹங்கள் = கிருஹங்களைப் போல் அமைந்துள்ள குகைகள்.

4. உஜ்ஜயினியானது, விந்தியமலையிலிருந்து வடக்கு

வாயினுமாகட்டும்; உஜ்ஜயினீநகரத்து மாடமாடங்களிற் பிரீதி பாராட்டுவதில் மட்டும் நீ பராமுகமாயிருத்தலாகாது; மின்னியொளிக்கும் நினது மின்னற்கொடியைக் கண்டு அச்சமுற்று அசையும் கடைக்கண்களையுடைய நகரத்து நங்கையரின் நேத்திரங்களுக்குப் பாத்திரமாய், அதனால் ஆனந்தமனுபவிக்காமற் போவாயாயின் நீ [1]வஞ்சிக்கப் பெற்றவனாவாய். உஜ்ஜயினிக்குப் போகும் பாதையில், அலைகளால் தாக்கப்படுவதுபற்றி ஆர்ப்பரிக்கும் நீர்வாழும் பறவைகளின் பந்தியாகும் [2]அரை நாண்மாலையைப் பெற்று, நீர்ச்சுழியாகும் நாபியை விளங்கச் செய்துகொண்டு, இடறியிடறி இரமணீயமாய் ஓர் அங்கனைபோல் அசைந்தோடும் நிர்விந்த்யை என்னும் நதியினிடம் சேர்ந்து [3]இனிதான நீரை உட்கொள்வாயாக; [4]மாதர்கள், காதலர்களிடம் நடையுடை முதலியவற்றால்

முகமாய் ஓடும் நிர்விந்த்யை என்னும் நதிக்குச் சிறிது கிழக்கிலுள்ளது; மேகம் செல்லவேண்டிய வழியோ, மேற்புறமாகச் சற்று ஒதுங்கியிருக்கிறது; ஆகையால் சிறிது சுற்று வழியெனக் கூறினன்.

1. உஜ்ஜயினிக்குச் சென்று ஆங்குள்ள ஸ்திரீரத்தினங்களைக் காணாமலிருப்பின், கண்கள் படைத்ததற்கும் ஜன்மமெடுத்ததற்கும் பயனில்லாமற் போய்விடுமெனக் கருத்து.

2. நீர்ப்பறவைகள் வரிசையாயிருந்து ஆர்ப்பரித்தல், சதங்கைகளுடன் அரையிற்கட்டிய தங்கச்சங்கிலிகலகலவென்று சப்திப்பதுபோல் இருக்குமெனப் பொருள்.

3 இனிதாக இரஸானுபவம் செய்வாய் என்றும் சிலேடையாக மற்றோர் அர்த்தம் உண்டு.

4. நதிகளை ஸ்திரீயாக வர்ணிப்பது வழக்கம்.

விளக்கிக் காட்டும் விலாஸங்களே, அவரது இன்றியா மையா இன்பமொழியாமன்றோ? 27 - 28.

"ஓ மேன்மையான மேனியழகு வாய்ந்த மேகமே! நீ அவ் வாற்றைக் கடந்தேகிய பின், ஸிந்து என்னும் நதியை ஸந்திக்கப்போகின்றனை; அந்நதி, [1]வேணி போல் வெகு மெல்லிய நீரோட்டமுடையதாய், தீரத்தின் ஓரங்களில் முளைத்திருக்கும் மரங்களிலிருந் துதிரும் பழுப்பிலைகளால் வெண்ணிறங்கொண்டு, உனது பிரிவாற்றுமையினுலுண்டாகிய அத்தகைய எளிய நிலைமையினால், நினது நிரதிசயமான [2]ஸௌபாக்கியத்தை அறிவிக்கப்போகின்றது; ஆகையால், அந் நதி, எவ்விதச் செயலால் தனக்குண்டான மெலிவை யிழந்து மேம்பாடடையுமோ, அதை நீ ஒருவனே நிறைவேற்ற [3]வல்லவனென்கின்றனை. 29.

"பிறகு, உதயனன் என்கிற இராஜனது [4]கதையைக் கூறுவதில் திறமை பொருந்தியக் கிராமத்துக்

1. வேணி = தலைப் பின்னல். [கோடைகாலசதின் இறுதியில் நீரெல்லாம் வற்றியிருக்குமானதால் ஆற்றின் நீரோட்டம் சிறுபான்மையே; மேலும் ஜலம் தெளிவுற்று நீலவர்ணமாயுமிருக்கும்; ஆகையால் அந்நதி வேணிக்கு ஒப்பிடலாயிற்று.]

2. ஸௌபாக்கியம்=ஸௌந்தரியம் முதலியவற்றால் மனதைக் கவரும் சக்தி.

3. விரஹவேதனையனுபவிப்பவள், தலைமயிரை ஒரு பின்னலாகப் பின்னி, உணவு வேண்டிராமல் மெலிவடைந்து, உடல் வெளுத்து ஏங்கித் தவிப்பதுபோல் இந் நதியும் இருப்பதால், இந் நதியின் இவ்வெளிய நிலைமையை—நீரைச் சொரிந்துப்—போக்குவதற்கு மேகத்தாலன்றி வேறெவராலுமாகாது எனக் கருத்து.

4. கௌசாம்பீதேயத்தரசனும் வத்ஸராஜன் என்று வேறு பெயர் கொண்டவனுமான உதயனன் என்பவன்

கிழவர்களையுடையதான **அவந்திதேயத்தை** யடைந்து, ஆங்கு, முற்கூறிய செல்வம் செழித்த விசாலை யென்று மற்றோர் பெயர்கொண்ட **உஜ்ஜயினீநகரத்தை** அணுகக் கடவாய்; அஃது, வானவர், தாம் செய்த புண்ணிய கர்மங்களின் பயனை மேலுலகிற் சிறிது அனுபவித்து, அந் நல்வினைப்பயன் அளவிற் குறைந்தும்—சிறிது மிகுந்திருக்கையிலேயே, அமரலோகத்தை விட்டு அவர் அவனியை யடைய, அவரது மிகுந்துள்ள புண்ணியகர்மங்களாற் படைக்கப்பெற்றதான கண்ணைப் பறிக்கும் காந்தி பொருந்திய விண்ணுலகின் ஓர் பகுதியேயாமெனத் தோற்றும்.[1] அந் நகரத்தினில், விடியற் காலங்களில், மதங்கொண்ட ஸாரஸப்பறவைகளின் மிகத் தெளிவான இனிய தொனியை இடையறாது இசையச் செய்வதும், சிறிது மலர்ந்த தாமரைமலர்களின் மணத்துடன் சேர்வதால் பரிமளம் வீசுவதுமான, **சிப்ரை** யென்னும் ஆற்றிலிருந்து வரும் காற்றானது—வேண்டிக்கொண்டு நயவசனங் கூறும் நட்புமிகுந்த நாயகனைப் போல், அங்குள்ள அங்கனைகளின்

அவந்திதேயத்தரசனான மஹாஸேனன் என்னும் மன்னவனது மாயச் செயல்களுக்குச் சிக்குண்டு, அவனால் தனது தேயத்திற்குக் கொண்டுவந்து சிறையிலிடப் பெற்று, யௌகந்தராயணன் என்கிற பிரதானமந்திரியின் பெருமுயற்சியினால் பின்பு மீட்கப் பட்டு, மஹாஸேனனை வென்று, வாஸவதத்தை யென்னும் அழகிய மகளொருத்தியை எடுத்து வந்து மணம்புரிந்தவனாய், தன் தேயமடைந்து, பெரும் புகழுடன் அரசு செலுத்தினன்; என்பதே உதயனகதையின் சுருக்கமான வரலாறாம்.

1. மிகுந்துள்ள நல்வினைப்பயன்களனைத்தையும் அனுபவிப்பதற்கு, அவர்களுக்கேற்றவாறு ஸ்வர்க்கத்தின் ஒரு பாகமே அப் பட்டணமாய் அமைந்தது போலும்; எனப் பொருள்.

அங்கங்களுக்கு அனுகூலமாய் அசைந்து, கணவருடன் கிரீடை செய்ததாலுண்டான அவரது ஆயாஸத்தை அகற்றிவருகின்றது. நீ நெடுந்தூரம் வழி கடந்தேகியதால் இளைத்துப் போவாயாதலின், அவ் விடத்தில் மாளிகைகளது சாளரங்களின் வழியாக வெளிக் கிளம்பும்—மாதரது கூந்தலைப் பதனிடும்—தூபங்களால் நினது சரீரத்தைச் [1]செழிக்கச் செய்துகொண்டு, ஆங்கு, அகத்திலுள்ள மயில்களால், தமது நண்பன் வந்தானென நேசத்துடன் நர்த்தனமாடி நன்குபசரிக்கப் பெற்று,[2] ஸுகுமாரமான ஸுந்தரிகளின் பாதங்களிலுள்ள செம்பஞ்சுக் குழம்புகளின் பதிவுகளை அழகாகப் பெற்றனவும், புஷ்பங்களால் பரிமளம் பொருந்தியவையுமான அந் நகரத்தின் மேன்மை பெற்ற மாடங்களின்மீது இளைப்பாறிவிட்டு, பின்னர், [3]பிரமத கணங்கள், உன்றனை, தமது பிரபுவான பரமசிவனது கண்டத்தின் கருநிறக் காந்தியோ வெனப் பேராதரவுடன் பிரமங்கொண்டு பார்த்தவாறிருக்க, மூவுலகுக்கு மீசனான சண்டிகாபதியின் அதி புனிதமான ஆலயத்தை யடையக் கடவாய்; அவ் வாலயம், நீர்விளையாடி வெளி யேறிய வனிதைகளது நீராட்ட ஜலத்தின் நறுமணமேந்தியதும், நைதல்மலர்ப் பொடிகளின் பரி

---

1. முற் கூறியவாறு மேகத்தினுடலில் தூமமும் ஓர் அம்சமாதலால், அங்கு தூமத்தின் சேர்க்கையினால் மேகத்தின் தேஹம் செழிக்கக் கூடுமென்று கருத்து.

2. மயில்கள் மேகத்தைக் கண்டு மனக் களிப்புடன் தோகையை விரித்துக் கூத்தாடுவதும், அதனால் அவற்றிற்கு மேகத்தை நண்பனாகக் கூறுவதும் முறை.

3. பிரமதகணம்— சிவனது பரிவாரம்.

மளத்தைப் பெற்றதுமான கந்தவதீ யென்னும் ஆற்றிலிருந்து வரும் வாயுவால் அலைக்கப்படும் பூஞ்சோலைகளாற் சூழப்பெற்றுள்ளது. நீர்கொண்ட மேகமே! நீ மற்றொரு ஸமயத்திலும் **மஹாகாளமென்னும்** க்ஷேத்திரத்தை யடைந்து, கதிரவன் கண்மறையுமளவும் காத்திருந்து,[1] சூலமேந்திய சிவபெருமானுக்கு மாலைப்பொழுதிற் பூஜை செய்யுங்கால் மிகக் கொண்டாடக் கூடியதான பறையறைப் பணியை நினது கர்ஜனைகொண்டுப் பணிவுடன் செய்தனையாயின், உனது கம்பீர முழக்கங்களுக்குப் பழுதிலாப் பயனைப் பெற்றவனாவாய். அங்கு, தமது இடையிலுள்ள மேகலையின் சதங்கை குலுங்க ஒழுங்காயடிவைத்து நடந்தேகும் நடனமாதுகள், பிடிகளில் இழைத்த மணிகளின் ஒளிகளால் மெழுகப்பெற்ற கலுக்களுடன் கூடிய சவரிகளைக் கேளியாய் வீசிக் களைத்துப்போன கரங்களையுடையவராய், நாயகரது நகத்தழும்புகளுக்கு மிகவும் இதமான மழையின் முதற்றுளிகளை நின்றனிடமிருந்தடைந்து, பின்னர், கரிவண்டுகளின் வரிசைபோல் நீண்ட அவரது கடைக்கண்பார்வைகளுக்கு நீ பாத்திரமாகப் போகின்றனை.[2] பிறகு, அப்பொழுதே மலர்ந்த செம்பருத்திமலரைப் போல் செந்நிறங்கொண்ட அந்திப்பொழுதிலுண்டாகும் காந்தியைப்

---

1. பகற் பொழுதிலேயே போய்க் காத்திரு எனக் கருத்து.

2. மேகம், பரமசிவனைத் தொழுது பணிவிடை செய்ததின் பயனாக, உடனே, உத்தமஸ்திரீகளது கடாக்ஷவீக்ஷணத்தைப் பெற்றதென்க.

பெற்ற நீ,[1] நடராஜன் நர்த்தனம் செய்ய முயலுங்கால் அஞ்சாமற் பின்புறமாகச் சென்று, அவரது [2]நீண்ட புயங்களாகும் நெடிய மரங்களின் வனத்தினிடையில் வட்டமிட்டுப் புகுந்து, அக் காலை, பார்வதியும் நினது பக்தியுடன் கூடிய பணியை இமைகளசையாமற் பார்த்தவாறிருக்க, இரத்தங் கசிந்த யானையின் சர்மத்தை அணிவதில் அவ்வீசனுக்குள்ள ஆசையை அகற்றுவாயாக. அவ் வுஜ்ஜயினியின்கண், இரவில் அடர்த்தியான அந்தகாரத்தினால் இராஜமார்க்கம் [3]மறைக்கப்பெற்றிருக்குங்கால், காதலரது இருப்பிடம் நோக்கிச் செல்லும் பெண்களுக்குப் பொன்னிழைபோல் பளப்பளப்பான மின்னொளி கொண்டு நீ மார்க்கத்தை அறிவிக்கவேண்டும்; அவர் மிகவும் அச்சமுறுமியல்பினராதலின், நீ மழையைப் பொழிந்துகொண்டு முழக்கத்துடன் குமுறவேண்டாம். நினது மின்னொளியென்னும் இல்லாள்,[4] நெடுநேரம் ஒளிவீசிக் களைப்புறுமாகையால், நீ அதனுடன் இளைப்பாறுவதன் பொருட்டு, படுத்துறங்கும் மாடப்புறாக்களுடன் கூடிய ஏதேனும்

---

1. இச் சென்னிறத்தினால், இரத்தங் கசிந்த கஜசர்மத்திற்கு ஸமானமாக மேகம் வர்ணிக்கப்பட்டதென்றறிக.

2. சிவன், மாலைப்பொழுதில் ஆகாயத்தையளாவும் ஆயிரக் கணக்கான நீண்ட புயங்களை வீசிக்கொண்டு அட்டஹாஸத்துடன் நர்த்தனம் பண்ணுவதாகப் பிரஸித்தி.

3. மன்மதபாணங்கள் தாக்கி மிகக் குழப்பமுற்ற மனத்தினரான மங்கையர் காரிருளையும் கவனிக்காமற் காதலரிடம் செல்வதியல்பு.

4. மின்னலை ஸ்திரீயாகவும், மேகத்திற்கு மனைவியாகவும் கூறுவது வழக்கம்.

ஓர் மாளிகையின் கொடுங்கையின்கண் தங்கியிருந்து, அவ்விரவைக் கழித்து, மீண்டும் ஆதித்தன் உதித்த பின், மிகுந்துள்ள வழியையும் கடந்தேகக் கடவாய்; நேயர்கள், தாம் நிறைவேற்றுவதாக ஏற்றுக்கொண்ட காரியங்களைச் செய்து முடிப்பதில் இடையில் ஊக்கக் குறைவு பெறமாட்டாரன்றோ? 30—38

"அக் காலே, காதலர் வந்து கண்டிதை யென்னும் நாயிகைகளின்[1] கண்ணீரைப் போக்கவேண்டியிருப்ப தால, நீ, கதிரவனது ஒளி வரும் வழியைக் கடுக விட்ட கல வேண்டும்; அவ்வாதித்தனும், தாமரையோடை யாகும் தனது காதலியின் கமலமலரென்னும் வதனத் தில் ததும்பும் பனித்துளிகளாகிற கண்ணீரைப் போக் குவதற்குத் திரும்ப வந்திருக்கையில், நீ, அவனது கரங்களை[2] இடையிலிருந்துத் தடுப்பாயாயின், அவன் பெரிதும் பொறாமை கொள்வான். 39.

"அப்பால், கம்பீரை யென்னும் ஆற்றின் மிகத் தெளிவான மனமெனத் தகும் தண்ணீரினுள், இயற் கையிலேயே வெகு அழகு வாய்ந்த நினதுருவமே பிரதிபிம்பரூபமாய் பிரவேசிக்கப் போகின்றது; ஆத லால், அவ்வாற்றின் ஆம்பல்மலர்களால் வெளிறிய

1. கண்டிதை = தனது கணவன் பிறரிடம் காதல்கொண் டிருப்பதைக் கண்டு மனநோயுற்ற மாது.

2. கரங்கள் = கிரணங்கள், கைகள் என்றும் மற்றொரு பொருள். [சூரியகிரணங்கள் பட்டுப் பனித்துளிகள் உலர்ந்து விடுமாதலால், அவைது கைகளால் கண்ணீரைத் துடைப்ப தற்கு ஒப்பிடப் படுகிறது. தாமரை யோடையை ஸ்திரீயாக வும், அது சூரியனைக் கண்டு மகிழ்வுறுவதுபோல் மலர்வதால் சூரியனுக்கு அதை மனைவியாகவும் கவிகள் மொழிவது முறை.]

வையும், குலுங்கித் துலங்குபவையுமான சிறு மீன்களின் துள்ளுதலாகும் கண்ணோக்கங்களை, நீ, வன்னெஞ்சனைப் போல் புறக்கணித்து வீணாக்குவதுசிதமல்ல.[1] நண்பனே! நீரளவும் படர்ந்துவந்த நீர்வஞ்சிக் கொடியாகும் கரத்தினால் பற்றிக் கொள்ளப் பெற்றதுபோல் தோற்றுவதும், இரு கரைகளாகும் கடிதடங்களினின்று விலகியதுமான கருநிறங் கொண்ட அந் நதியின் ஆடையெனத் தகும் நீரை யுறிஞ்சு அந் நதியின்பால் சாய்ந்திருக்கும் நின்றனக்கு, அங்கிருந்து மீண்டும் புறப்படுவது மிகப் பிரயாஸமாய் முடியும். 40-41.

“நீ அங்கிருந்து **தேவகிரியை** நோக்கிச் செல்ல முயலுங்கால், நினது மழைப் பெருக்கினால் ஊறிப் பொறுமலுற்ற நிலத்திலிருந்தெழும் மணத்தின் சேர்க்கையினால் மனோஹரமானதும், யானைகளால் அவற்றின் துதிக்கையின் துவாரங்களிலிருந்து இனிய தொனி யுதிக்குமாறு[2] பருகப் பெற்றதும், அடவியிலுள்ள அத்திக்கனிகளை நன்கு பழுக்கச் செய்ய வல்லதுமான குளிர்ந்த காற்றானது உன்றன்மீது மெதுவாக வீசப்போகின்றது. நீ, நின்றனை மலர் சொரியும்

1. தெளிந்த தண்ணீருக்குள் மேகத்தின் பிரதிபிம்பம் விழுந்திருப்பதானது, அந் நதியாகும் பெண், காதலனைப் போன்ற கார்முகிலைத் தனதுள்ளத்தில் தியானித்திருப்பதாகவும், துள்ளி விளையாடும் மீன்களாகும் கண்களைக்கொண்டு தனதருகில் வந்திருக்கும் மேகத்தை அது நோக்குவதாகவும், அத்தகைய நதியை அனுஸரிக்காமல் அப்பால் செல்வது மேகத்திற்குச் சரியல்லவென்பதாகவும் தாத்பர்யம்.

2. சில யானைகள், மதத்தின் வேகத்தினால் தாபம் மேலிட்டுக் குளிர்ந்த காற்றை உறிஞ்சுவது இயல்பாம்.

மேகமாகச் செய்துகொண்டு,[1] ஆகாயகங்கையின் நீர் தனில் நனைந்து ஈரமானவையும் நறுமணமுள்ளனவு மான மலர்களைக் கொண்டு, அக் குன்றத்தினில் என்றைக்கும் நிலையாய் வீற்றிருக்கும் ஆறுமுகக் கடவுளின் மீது ஆதாரவுடன் சொரிவாயாக; இளம்பிறையைச் சிரந்தனிலேந்திய சிவபெருமானால், இந்திரனது ஸேனையை இரக்ஷிக்கும்பொருட்டு அக்கினிமுகத்திலிடப் பெற்று, அங்கிருந்து ஆதித்தனுக்கும் மேலாக ஒளி வீசிய வண்ணமுதித்த மஹத்தான தேஜஸ்ஸல்லவோ அக் கடவுள்[2] ! பின்னர், மஹேச்வரனது முடியிலுள்ள மதியின் கதிரொளியால் வெளிறிய கடைக்கண்களையுடையதான அக் கந்தபிரானது மயிலை, அம் மலையிலிருந்துண்டாகும் எதிரொலியுடன் சேர்ந்து மேலோங்கி வளர்ந்த உனது முழக்கங்களைக்கொண்டு தாண்டவமாடத் தூண்டக் கடவாய்; பார்வதியான

---

1. முன்பு 6-வது பத்தியத்தில் விளம்பிய வண்ணம், மேகத்திற்குக் காமரூபம்(இஷ்டம்வாய்ந்த உருவத்தை)எடுக்கத் தகுந்த வல்லமையிருப்பதாகக் கருதி, புஷ்பவர்ஷம் செய்யக் கூடிய மேகமாகப் போக வேண்டுகிறான். [கந்தோதக்ரம் ததது வவ்ரஷு: புஷ்பமாச்சர்யமேகா:=மிகவும் ஆச்சரியகரமான மேகங்கள் மணம் மிகுந்த மலர்களைச் சொரிந்தன, என்று இரகுவம்சத்திலும் மேகம் புஷ்பவர்ஷம் சொரிந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.]

2. தேவர்கள், தாரகாஸுரன் செய்த தீங்குகளைத் தாங்காதவராய், சிவபெருமானை வேண்டிக்கொள்ள, அவரது ஆஞ்ஞையினால் அக்கினிபகவான் தனதிடமுள்ள அச்சிவனது வீரியத்தைக் கங்காதேவியினிடம் விட, கங்கை அதைத் தாங்க முடியாமல் ஹிமாலயத்தின் ஓரத்தில் ஓர் ஞாழற்காட்டில் ஒதுக்க, அங்கிருந்து அத் தேஜஸ்ஸு சுப்பிரம்மணியனாக ஆவிர்ப்பவிக்க, பின்னர் அவரையே தேவர் ஸேனாதிபதியாகச் செய்தனர்; என்பது இக் கதையின் சுருக்கம்.

வள், அம் மயிலின் தோகையிலிருந்து நழுவி விழுந்ததும், மண்டலாகாரமாய் ஒளி வீசுந் தன்மையதுமான இறகை, புதல்வனிடமிருக்கும் பிரீதியினால், தன் செவிதனில், முன்னாலணிந்திருந்த நைதல் மலரையும் நீக்கிவிட்டு அணிந்து கொள்வள். 42—44.

“ இங்ஙனம் சரவணபவனை [1] ஷண்முகக்கடவுளை ஆராதித்து, வீணை யேந்திய ஸித்த தம்பதிகள், நீர்த்துளிகள் வீழ்ந்துத் தமது வீணையின் இன்னிசை வீணாய்ச் சீர்குலையுமென்றஞ்சி,[2] நினது பாதையை விட்டு விலக, நீ, அப்பால், அதற்கப்புறமுள்ள வழிகளிலும் சிறிது தூரம் கடந்தேகி, ஸுரபி யென்னும்[3] கபிலையின் பெண்களான பல்லாயிரம் பசுக்களை வேள்விகளில் வதைசெய்ய அவற்றினின்றும் பெருகிய உதிரத்தினால் உற்பத்தியானதும, தரணிதனில் இரந்திதேவன் என்னும் தர்மபிரிபுவின் புகழே உருவெடுத்து வெள்ளமாகப் பெருகிய தோவெனப் பகரக்

---

1. சரவணபவன் — ஞாழற்காட்டிலுதித்தவன்.

2. ஸித்தரென்னும் தேவர்கள் தமது மனைவிமாருடன் சுப்பிரம்மணியனை வீணைகொண்டுத் துதிக்க வருங்கால், ஆங்கு மேகம் தூய்மையான ஜலத்துளிகள் நிரம்பிய புஷ்பங்களைக் குமரன்மீது குளிரச்சொரிய, அந் நீர்த்துளிகள் தமது வீணையில் வீழ்ந்து அதன் இனிய தொனியைக் கெடுத்தால், தமது கைங்கரியத்திற்குத் தடையுண்டாகு மென்றெண்ணி அஞ்சினரெனக் கருத்து.

3. முன்னால் தேவாஸுரர்கள் பாற்கடலைக் கடைகையில், அதிலிருந்து வேள்விகளுக்கு வேண்டிய நெய் முதலிய ஹவிஸ்ஸுக்க ளளிக்க வல்லதும், ஆகவே அமரர்களால் ஆராதிக்கப் பெற்றதுமான ஸுரபி என்னும் கபிலையுண்டாயிற்று; என்று ஸ்ரீ விஷ்ணுபுராணம்.

கூடியதுமான [1] **சர்மண்வதீ** என்னும் நதியை மேன்மை படுத்த மேலிருந்திறங்குவாயாக. கண்ணபிரானது நிறத்தைக் களவு புரிந்ததுபோல் தோற்றும் நீ, அவ்வாற்றின் வெள்ளத்திற்கருகில் நீரைப் பருகுவதற்குச் சாய்கையில், விமானத்திலேகும் வானவருக்கு, அந் நதி வெகு தூரத்திலிருப்பதால்—விசாலமாயிருந்தும்—வெகு குறுகியது போல் தோற்றுமாதலின், அவ் விண்ணவர், அவ்வாற்றைக் கண்டு, பூதேவிக்குப் பருத்த நீலமணியாலாகிய நடுநாயகத்தைப் பெற்ற ஒற்றைவட முத்துமாலையோவெனக் கருதப்போவது திண்ணம்.[2] 45 - 46.

---

1. முன்னொருகால், இரந்திதேவன் என்கிற மேன்மை பொருந்திய ஓர் மன்னவனது தேயத்திற் சில பசுக்கள் கானகங்களில் மேய்கையில், அவை கனகமயமான கதிரொளிவீசும் அங்கங்களைப் பெற்ற வேற சில கபிலைகளைக் கண்டு ஆச்சரியமுற்று, 'அம்மணிமார்களே! இவ்வழகிய ரூபமும் கண்ணைப் பறிக்கும் காந்தியும் உங்களுக்கு எங்ஙனம் ஏற்பட்டது?' என வினவ, அத் தைவப் பசுக்கள், 'தார்மிகர்கள் எங்களை முறைப்படி வேள்விகளில் வதைசெய்ததாலுண்டான புண்ணியத்தின் பயனாக யாம் இவ்வாறானோம்.' என மறுமொழியளிக்க, அது கேட்டு, அவை அரசனிடம் வந்து, வேள்வியில் தம்மை வதைக்க வேண்டிக்கொள்ள, அவ் வேந்தனும் அங்ஙனமே செய்ததால், அப் பசுக்களின் சர்மங்களிலிருந்து பெருகிய இரத்தம் ஆறாகப் பெருக, அஃது, பிறகு சர்மண்வதீ என்கிற நதியாகப் போயிற்று; அவ் வரசனும் பசுக்களுடன் புண்ணிய லோகத்தையடைந்தான்; என மஹாபாரதத்தில் இக் கதையின் வரலாறு.

2. வெகு உயரத்திலிருந்து பார்ப்பவருக்கு, பூமியில் நெடுக ஓடும் தெளிந்த ஜலத்தையுடைய அந் நதியானது பூதேவிக்கு ஒரு முத்துமாலை போலவும், அந் நதியில் நீரைப் பருக இறங்கிய கார்முகில் அதற்கு இந்திரநீலப்பதக்கம் போலவும் தோற்றும்; எனக் கருத்து.

"நீ அவ்வாற்றையும் கடந்து, கொடிபோன்ற புருவங்களின் பற்பல விலாஸங்களுடன்[1] கூடியனவும், இமைகளை விரித்துயர்த்துவதால் உயர்ந்தெழும் கறுப்பும் வெளுப்பும் கலந்த ஒளிகளுடன் விளங்குபவையும், ஆகவே, ஆகாயத்தி லெறிந்த குருக்கத்திப்பூக்களைப் பின்பற்றி மேலெழும் மதுகரங்களின் சீர்மையைக் கவர்ந்திழுப்பவையுமான **தசபுரத்து** நங்கையரது நேத்திரங்களின்[2] குதூஹலங்களுக்கு நினது மேனியைப் பாத்திரமாகச் செய்துகொண்டு செல்லக்கடவாய். 47.

"அப்பால், நீ, நிலத்திலோடும் நினது நிழலைக் கொண்டு, **பிரம்மாவர்த்த**மென்னும் தேயத்தை ஊடுருவிக் கடந்து,[3] பார்த்திவர் பலர் போர் புரிந்த குறிகளுடன் கூடிய அப் பெயர்பெற்ற **குருக்ஷேத்திரத்தை**யடையவேண்டும்; நீ தாமரைமலர்களின்மீது தாரை தாரையாக மாரியைச் சொரிவதுபோல், அவ்விடத்திற் காண்டீவமென்னும் வில்லேந்திய அர்ஜுனன்,

---

1. இதனால் 'புருவநெறிப்பு முதலிய விலாஸங்களறியாத......' என்று 16. வது பத்தியத்தில் வர்ணித்த நாடுகளிலுள்ள நங்கையரின் மாதிரிகளுக்கு மாறான சுபாவமானது நாகரிகஸ்திரீகளுக்கு விசேஷமென்பது குறிக்கப் படுகிறது.

2. கண்களில் சிலபாகம் வெளுத்தும், கருவிழி முதலிய சில பாகம் கறுத்தும் இருப்பதால், அவற்றின் காந்தி வானத்திற் கிளம்புவது, வெண்மையான குருக்கத்தி மலர்களைக் கரி வண்டுகள் பின்பற்றி யெழும்புவதுபோல் புலப்படும்; எனக் கருத்தாம்.

3. நிழல்மாத்திரம் பூமியில் ஓட, மேகம் அவ்விடத்தில், எங்கும் நிற்காமல் ஆகாயத்திலேயே செல்லவேண்டும்; எனப் பொருள்.

அரசர் முகங்களில் அதி தீக்ஷ்ணமான அம்புகளை அளவின்றிப் பொழிந்தனன். அழகிய குணமமைந்த அம்புதமே! பலபத்திரனவர், இரேவதீதேவியினது கண்களின் எதிரொளியைப் பெற்றதும், தன் மனமுவந்த சுவை பொருந்தியதுமான மதுவைப் பரிஹரித்து,[1] உறவினரிடமுள்ள உள்ளன்பினால் யாதொரு **ஸரஸ்வதீநதியின்** நீரைப் பருகினரோ, அந் நீரை நீயும் உட்கொண்டு, உள்ளத்தில் வெண்மையாகவும், வெளித்தோற்றத்தில் மட்டும் கருநிறமாகவும் ஆகப்போகின்றனை.[2] 48 - 49.

" பின்னர், நீ, அங்கிருந்து, **கனகலம்** என்னும் குன்றத்தின்கண், இமயமலையினின்றும் இறங்கியதும், ஸகரபுத்திரர்கள் ஸ்வர்க்க மேறுவதற்கேற்ற ஸோபானபந்தியாயமைந்ததும், ஜன்னுமாமுனிவரின் மகளெனப் படுவதுமான **கங்காநதியை** நோக்கிப் போக வேண்டும்; அக் கங்கையோ, கௌரியின் முகத்தினிற்

1. பலராமன், இரேவதீதேவியுடன்கூடவே மணிமய பாத்திரத்தில் மதுவை வைத்துக்கொண்டு அருந்துகையில், அவளது அழகிய கண்களின் பிரதிபிம்பம் அம் மதுவினுள் காணப்படுவதால், மத்யத்தின் இயற்கையான சுவையுடன் இன்னும் ஓர் இரஸவிசேஷம் இதனால் குறிப்பிடப்பட்டதாம்; பலராமனுக்கு மதுபானத்தில் மிகவும் விருப்ப முண்டென்பது பிரஸித்தம்.

2. ஸரஸ்வதீநதியின் நீரைப் பருகுவதால் பாவம் தொலைந்து உள்ளம் தூய்மை (வெண்மை) யாவதும், தண்ணீரை யுட்கொண்டதால் மேகம் நீலநிறமாவதும் இயல்பு; பலராமன் வெளித்தோற்றத்திற்கு வெகு வெண்ணிறங்கொண்டிருந்தும், ஸுஹ்ருத்வதத்தாலுண்டான பாவத்தைப் போக்கிக்கொள்ள மதுவைப் பரிஹரித்து விட்டு, ஸரஸ்வதீநீரையே பருகியது இதற்குச் சான்றாம்.

குடிலமாயுண்டான புருவநெறிப்பைக் கண்ணுற்று, தனது நகைப்புக்கொப்பான நுரைத் திரள்களைக் கொண்டு சிரிப்பதுபோல், சிவபெருமானது சிரத்தியிருக்கும் அம்புலியின் மீது அலைகளாகும் கரங்களை வைத்து, அவ்வீசனது சடைமுடிகளைப் பற்றிக்கொண்டதன்றோ![1] நீ; பின்புறம் ஆகாயத்தை நோக்கச் சற்றுத் தலைகீழாகச் சாய்ந்து, ஒரு திக்கஜம் போல், ஒருவாறு அவ்வாற்றிற்குக் குறுக்காயிருந்து, களங்கமற்றப் பளிங்குபோல் வெண்மையான அவ்வாற்றின் நீரை அருந்துவதற்கு ஆலோசிப்பாயாயின், அந்த க்ஷணத்தில் அவ் வெள்ளத்தின்மீது பரவும் நினது கறிய நிழலால் அந் நதியானது, யமுனையாற்றின் சேர்க்கையை

1. ஸகரன் என்கிற ஸூரியவம்சத்தரசன் அச்வமேத யாகத்தில் விடுத்த குதிரையை இந்திரன் பிடித்துப் போய் பாதாளலோகத்தில் ஓரிடத்திற் கட்டிவிட, அதைத் தேடிவரப்புறப்பட்ட ஸகரனது 60,000 பிள்ளைகள் பூமியைத்தோண்டி (ஸகர புத்திரர்கள் அப்பொழுது வெட்டியவிடங்கள் அகாதமான ஸமுத்திரமாய் விட்டதால் கடல்களுக்கு ஸாகரம் எனப் பெயர் வந்தது) பாதாளலோகம் போய், கபிலமுனிவர் தவம் செய்யுமிடத்திற் குதிரையைக் கட்டியிருக்கக் கண்டு, அதனால் அவரே அதைப் பிடித்துவந்ததாகப் பிரமித்து அவரைத் துன்பப்படுத்த முயல, அம் முனிவர், சினங்கொண்டு அவர்களைச் சாம்பலாகுமாறுச் சபிக்க, அவர்களது பாவங்களைப் போக்கி அவருக்கு நற்கதியுண்டாக்க முயன்ற அவ் வம்சத்தினரில், பகீரதனே விடாமுயற்சி செய்து, கங்கையைப் பூலோகத்திற்கு விண்ணுலகிலிருந்து கொண்டுவருங்கால், அக் கங்கையை சிவன் சிரஸ்ஸால் முதலில் தாங்கி, பின்னர் பூமியில் விட, அது வழியில் ஜன்னு மஹர்ஷியின் யாகத்தைக் கலைக்க, அவர் கோபத்துடன் நதியின் நீரனைத்தையும் பருகி, பகீரதனது வேண்டுகோளால் மறுபடியும் தனது காதால் அதை விட்டுவிட (இதனாலே ஜன்னு மகள் என்று இதற்குப் பெயர்), பிறகு அந் நதி பாதாளம் போய் ஸகரபுத்திரர்களது சாம்பல்களை நனைக்க, அவர்கள் அனைவரும்

மற்றோரிடத்திலும் பெற்றதுபோல் மனோஹரமாய்த்
தோற்றும்.[1] அவ்விடத்திற் படுக்கும் கஸ்தூரிமிருகங்
களது நாபிகளின் பரிமளத்தின் சேர்க்கையினால் நறு
மணங் கமழும் சிலைகளையுடையதும், பனித்திரளால்
வெண்ணிறமானதும், அவ்வாற்றிற்கே பிறப்பிடமு
மான இமகிரியை யடைந்து, அம் மாமலையின் சிரத்
தின்கண் மார்க்கசிரமத்தை அகற்றிக்கொள்ள நீ ஸுக
மாய் அமர்ந்திருக்கையில், முக்கண்ணனது வெண்
ணிற விருஷபத்தின் கொம்பினால் கொந்தி யெடுக்கப்
பெற்று அம் முனையில் தங்கியிருக்கும் சேற்றுக்கொப்
பான சாயலை யுறக்கப்போகின்றனை. ஆங்கு, வாயுவா
னது வெகு வேகமாய் வீசுங்கால் தேவதாருமரங்கள்
ஒன்றோடொன்றிழைய, அதனாலுண்டான காட்டுத்
தீயானது, சமரிமான்களின் வால்களிலுள்ள மயிர்த்தி
ரளைத் தீப்பொரிகளால் பொசுக்குக்கொண்டு அப் பர்
வதத்தைப் பீடிக்குமாயின், அப்பொழுது நீ தாரை
தாரையாக அளவிறந்த மழையைப் பொழிந்து அவ்

பிறகு நற்கதி யடைந்தனர் என்பது கதையின் வரலாறு;
பாவங்களைப் போக்கி நற்கதியளிக்கவல்ல மஹிமை கங்கைக்கு
இருப்பதாலும், அந் நதி விண்ணுலகிலிருந்து சிவனது சிரஸ்
ஸிலும், அங்கிருந்து பூமியிலும், பூமியிலிருந்து பாதாளத்திலும்
முறையே இறங்கிச் சென்றதால், அது ஸாகரர்கள் பாதாளத்தி
லிருந்து விண்ணுலகேறுவதற்குத் தகுந்த படிக்கட்டுபோல்
இருப்பதாகவும் வர்ணிக்கப்பட்டது; கங்காதேவியைச் சிவனுக்
குப் பத்தினியாகவும் கூறுவது வழக்கம்; (கங்காதேவி சிவ
னது சிரஸ்ஸிலிருப்பதைக் கண்டு, பார்வதி பொறாமை கொள்
ள, அது கண்டு கங்கை இன்னும் இறுமாப்பு மேலிட்டவளாய்த்
தனது பெருமையைக் காட்டிப் பரிஹாஸம் செய்வது போ
லிருக்கிறது; எனக் கருத்து.)

1. கங்கையும் யமுனையும் பிரயாகையென்னும் க்ஷேத்
திரத்தில் ஒன்று சேருவதால், இங்கு மற்றோரிடத்திலும்
எனக் கூறப் பட்டது. கங்கை வெளுப்பு, யமுனை கறுப்பு.

வனலை அடியோடு அவித்துவிடவேண்டும்; ஏனெனில், உத்தமரது பொருட்கள், ஆபத்தடைந்தவரின் துன்பத்தை அகற்றுவதையே பயனாகப் பெற்றவை யன்றோ? மேலும் அம் மாமலையில், சரபமென்னும் கொடிய விலங்குகள்,—நீ வழியை விட்டு விலகியிருந்தும்—உன்றன்மீது, தமது சரீரம் சிதைவுறுவதற்கே,[1] சினங்கொண்டு விரைவாயெழும்பிப் பாயுங்களாயின், நீ மேன்மேலும் ஆலங்கட்டிகளைக் கடுமையாகச் சொரிந்து அவற்றைச் சிதறடிப்பாயாக; பயனில்லாப் பணிகளைச் செய்ய முயன்ற எவர்தான் இறுதியிற் பரிபவத்திற்குப் பாத்திரமாகார்? அவ்விடத்திற் சிலைகளிற் செவ்வனே அமைந்திருப்பவையும், ஸித்தர்களால் ஆராதிக்கப் படுபவையுமான சந்திரசேகரனது திருவடிகளின் பதிவுகளைப் பக்தியுடன் வணங்கிப் பலமுறை வலம்வரக் கடவாய்; ஆஸ்திகர்கள் அவற்றைத் தரிசிப்பாராயின், அவர் இம்மையிற் பாவமனைத்தையும் இழந்து, தமதுடலைத் துறந்த பின், பிரமதகணங்களின் அழிவிலாப் பதவியைப் பெறுவதற்குரியவராவர்.[2] அக்குன்றத்

1. மேகம் வெகு உயரத்தி லிருப்பதால், இதன்மேற் பாயும் சரபமிருகங்களுக்கு அவற்றின் சரீரம் சிதைவுறுவதை விட மற்றொரு பயன் கிடையாதெனக் கருத்து. [சரபம் என்பது எட்டுக் கால்களுடன் கூடியதும், யானையைக் கொல்லும் வலிமையுள்ளதுமான ஒரு கொடிய விலங்கு.]

2. ஹிமாலயத்தில், சிவன், தம்மைப்பற்றி அனுஷ்டிக்கப் படும் அகில கர்மங்களும் ஸித்தி யடைவதன் பொருட்டு, தமது சிறப்புற்ற சரணங்களை வெளிப்படையாகச் சிலையிற் பதியச் செய்தனர் என்றும், ஸித்தி பெற விரும்புபவர் அவற்றைத் தரிசித்து, எவ்வுலகிலும் ஸஞ்சரிக்கத் தகும் தேஜோமயமான தேகத்தைப் பெறுகின்றனர் என்றும் சம்புராஹஸ்யத்திலுளது